


LKI

மார்ச் 1, 1943

3 அண

# நோட்டீஸ்

## வியாபாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

•

தற்காலத்திய சாமான்கள் போக்கு வரத்தின்
கஷ்டங்களை நிவர்த்தி செய்வதின் பொருட்டு,
நாங்கள் ஏராளமான சாமான்களை

## "மதராஸிலிருந்து பெங்களூருக்கும் திருச்சியிலிருந்து பெங்களூருக்கும்"

ஸரஸமான வாடகைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு
செய்துள்ளோம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன்
:: தெரிவித்துக் கொள்ளுகிறோம். ::

•

சாமான்களை ஜாக்கிரதையாயும் கூடுமானவரையில்
சீக்கிரமாயும் எடுத்துச்செல்ல நாங்கள் ஜவாப்தாரி.

மற்ற விபரங்களுக்கு தயவு செய்து எழுதவும்.

•

## ஸ்ரீ ராம விலாஸ் ஸர்வீஸ் லிமிடெட்,

203, மவுண்ட் ரோடு, மதராஸ்.

டெலிபோன் நெ 8536. தந்தி :- 'ரோட்ஹால்'

# மனோன்மணி

டாக்கீ பாட்டுகள்



GE.6055
தேவி திவ்ய
காதல் காதல்
GE.6056
ஆதியிலோர்
பார்வையே

பாடிய

T.R.ராஜகுமாரி

GE.6057 [ என் நெஞ்சமெனும்
வஞ்ச உலக



பாடிய

T.R.மஹாலிங்கம், வாணி
& குமாரி மாசிலாமணி

இதற்கு முன் வந்த
**மனோன்மணி**
டாக்கி பாட்டுகள்
GE.6052 & GE.6053

# கொலம்பியா ரிகார்டுகளில் கேளுங்கள்

**ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.**

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

S. கண்ணன் & கம்பெனி, திருச்சிராப்பள்ளி.


உண்மையான தேயிலைக் குறிப்புகள்
ஒரு தேநீர்ப்பாத்திரத்தைக் குறித்து பெரிய வழக்கு!
எங்கள் விற்பனையாளர் ஒருவர் – இலாகாவில் எல்லோரும் அவரை 'சாவலா' என்றழைப்பது வழக்கம். அவர் வாராவாரம் தூய்தான தேயிலை சப்ளை செய்துவந்திருந்த பஞ்சாபி கடைக்காரரொருவர் அவரது உயிலில் விற்பனையாளருக்கு சாவலா என்ற பெயரில் பித்தளை தேநீர்ப்பாத்திரம் ஒன்று எழுதிவைத்திருந்தார். அது பற்றி ஏற்பட்ட வழக்கில், விற்பனையாளர் சாட்சியார்த்தி ஆஜரானார். 'சாவலா' என்ற பெயர் அந்த விற்பனையாளருக்கு சட்டப்படி பொருந்துமென கோர்ட்டார் தீர்ப்பளித்தார்.
63 வாரம் நீடித்து நின்ற ஒரு விளையாட்டு
கப்பி மூலமாக தேநீர் உயர வரவழைத்தல்!
கோச்சனூடாவில் ஒரு புதிய பாலங்கட்டும்போது உயரவேலைசெய்யும் ஒரு ஆளுக்கு அருந்த ஒருகோப்பை தேநீர் கப்பி வழியாக கீழிருந்து மேலுக்கு ஹோட்டல்க்காரர் அனுப்பியதை எங்கள் விற்பனையாளர் கவனித்தார். அந்த வேலையாள் தேநீர் அருந்த கீழிறங்கி வருவதானால் சமயம் வீணில் நஷ்டமாகுமில்லையா — அதுவும் காலைவேளையின்போது! அந்தக்கோப்பையில் இருந்தது அன்று காலையில் தான் விற்பனையாளர் சப்ளைசெய்த சோரா தேயிலைப்பானம் என அவர் பின்பு கேட்டறிந்தார்.
எங்கள விற்பனையாளர், பி ஷனபவர், ஒரு சதுரங்கப்பிரியர். பஞ்சாபில் ஒரு சிறு கிராமத்திலுள்ள அவரது வாடிக்கைக்காரர் ஒருவருக்கு சதுரங்கம் விளையாடத்தெரியுமென்று அறிந்தார். ஆனால், வாராவாரம் தூய்தான தேயிலையும்கொண்டு செல்லும் போது, அந்த ஆளுடன் ஒரு ஆட்டம் பூரா விளையாட சமயம் கிடைக்காததால், ஒவ்வொரு தடவையும் தேயிலை கொண்டுசெல்லுகையில் ஆளுக்கும் ஒரு காய் நகர்த்துவதென்று அவர்களிடையே ஒரு ஏற்பாடாயிற்று. அதுபடிக்கு தொடர்ந்துவந்த ஆட்டம் முடிவுபெற 63 வாரம் சென்றது விற்பனையாளர் கவனித்தார்!
கல்கத்தாவிலிருந்து பம்பாய் வரையிலும் ஒரு ரயில்வண்டி ஓடப்போதுமான அளவு நீராவி!
இந்தியாவில் ஒவ்வொரு பட்டணத்திலும் கிராமத்திலும் எங்கள் சொந்தம் விற்பனையாட்கள் பரிமாறிவரும் தூய்தான தேயிலையைக்கொண்டு தினம் தேநீர் தயாரிக்க எவ்வளவு கொதிக்கும் ஜலம் உபயோகிக்கப் படவேண்டும்! மூன்று தினம் செலாக்குப்பார்த்தால் அவ்வளவு ஜலத்திலிருந்தும் கிளம்பும் நீராவியால் கல்கத்தாவிலிருந்து பம்பாய்வரையில் ஒரு ரயில்வண்டியோட்டலாம்.
ப்ரூக் பாண்ட்

# கல்கி பொருளடக்கம்

மலர் 2
இதழ் 22

1943 மார்ச் 1

சித்திரபானு ௵
மாசி 17௳



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்கள்.




தமிழ் டாக்கிகளில் சில சமயம் தப்பித் தவறி வேஷங்கள் பொருத்தமாக அமைந்து விடுவதும் உண்டு. ஆனால் பாபநாசம் சிவனுக்குக் குசேலர் வேஷம் பொருத்தமா விருந்ததுபோல் வேறு யாருக்கும் அவ்வளவு பொருத்தமான வேஷம் அமைந்ததில்லை. இவ்வளவு அபூர்வமான பொருத்தத்தை ஒரு தடவையோடு விட்டுவிடக் கூடாதென்றுதான் 'குபேர குசேலர்' என்ற படத்தைப் பிடிக்கிறார்கள் போலும். இந்தப் படத்தில் மறுபடியும் சிவன் குசேலராகக் காட்சி தருகிறாராம். தமிழுக்கும் தமிழ் இசைக்கும் கர்நாடக சங்கீதத்துக்கும் பாபநாசம் சிவன் செய்திருக்கும் சேவைகள் ஒப்பற்றவை. நூற்றுக் கணக்காக தமிழ்க் கீர்த்தனங்களை இயற்றியிருக்கிறார். அவற்றில் பல, சங்கீத வித்வான்கள் கச்சேரிகளில் உற்சாகத்துடன் வித்யாசப்படுத்திப் பாடக்கூடியவை. கர்நாடக சங்கீதத்தை ஓரளவு தமிழ் டாக்கிகளில் புகுத்திய பெருமையும் பாபநாசம் சிவனுக்கு உண்டு. இப்பெரியார் நீடூழி வாழ்ந்து தமிழ் நாட்டுக்கு இன்னும் பல அரிய தொண்டுகளைச் செய்யும்படி பகவான் அருள் புரியட்டும்.

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்

# என்ன சேதி?

## மிராசுதார் துயரம்

"தஞ்சாவூர் மிராசுதார் துயரம்" என்ற தலைப்பு முன்னெல்லாம் பத்திரிக்கைகளில் அடிக்கடி வெளியாவதுண்டு. சில காலமாக மேற்படி தலைப்பு காணப்படாதிருந்து சமீபத்தில் — இந்தக் காகித கிராக்கி காலத்தில் — மறுபடியும் தோன்றி யிருக்கிறது. ராஜீகம், தெய்விகம் என்ற காரணங்களினால் தஞ்சாவூர் மிராசுதார்கள் துயரம் அடைவது வழக்கம். சில சமயம் பெருமழை பெய்து விளைச்சலைப் பாழாக்கும்; சில சமயம் வெயில் காய்ந்து பயிர்கள் காய்ந்து போகும்; அதிகப் பனியினால் குறை விழுந்து நாசமாகும். இதற்கெல்லாம் தப்பிப் பிழைத்தால் நில வரி, நீர் வரி, மர வரி, புறம்போக்கு வரி என்று சர்க்கார் ரிவினியூ இலாகா தொல்லை கொடுத்து அவர்களுடைய பிராணனை வாங்கும்.

இதெல்லாம் போதாதென்று 'தானியக் கட்டுப்பாடு' என்னும் புதிய தொல்லை ஒன்று அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வெளியே நெல் ஏற்றுமதி செய்யக் கூடாதென்பது சர்க்கார் உத்தரவு. இதனால், மிராசுதார்கள் நெல்லை விற்க முடியாமலும், விற்றாலும் நியாயமான விலை கிடைக்காமலும் திண்டாட வேண்டி யிருக்கிறது. யுத்த காலத்தில் சர்க்கார் தானியக் கட்டுப்பாடு செய்வது அவசியமா யிருக்கலாம். ஆனால், அப்படிக் கட்டுப்பாடு செய்யும் இடங்களில் அக விலையை யொட்டி சர்க்காரே நியாயமான விலையை ஏற்படுத்தி, அந்த விலைக்கு நெல்லையும் மற்ற தானியங்களையும் வாங்கிக்கொள்ளத் தயாரா யிருக்க வேண்டும். இப்படிச் செய்யாமல் நெல் ஏற்றுமதியை மட்டும் தடுப்பது பெரிய அநீதி என்பதில் சந்தேகமில்லை. வெளி ஜில்லாக்களிலுள்ள தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள் தங்கள் சொந்த உபயோகத்துக்குக் கூடத் தங்கள் சொந்த நெல்லை வரவழைத்துக் கொள்ளக் கூடாதாம்! இதை யெல்லாம் பார்க்கும்போது, தஞ்சாவூர் ஜில்லாவில் நிலம் இல்லாதவர்களைப்போல் கொடுத்து வைத்த பாக்கியசாலிகள் வேறில்லை என்று சொல்லத் தோன்றுகிறது. எனினும், இப்போதைக்கு சென்னை அட்வைஸர் சர்க்கார் கொஞ்சம் கண் திறந்து பார்த்து மேற்படி அநீதியை நிவர்த்தித்தால் நன்றாயிருக்கும். இதன் மூலம் சர்க்கார் வரி வசூலாவது சுலபமாகும் என்பதையும் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

## யார் விரோதி?

மகா யுத்தம் ஆரம்பித்து மூன்று வருஷம் ஆன பிறகுங் கூட, அமெரிக்கர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு சந்தேகம் இன்னும் தீருகிற வழியாயில்லை.

"இந்த யுத்தத்தில் நம் முக்கிய விரோதி யார்?" என்பதுதான் அந்த சந்தேகம். அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்காக அவர்கள் அடிக்கடி பொதுஜன (காலப்) வோட் எடுத்துப் பார்த்து வருகிறார்கள். ஒரு வருஷத்துக்கு முன் நடந்த தேர்தலில், நூற்றுக்கு 64 பேர் "ஜெர்மனிதான் முக்கிய விரோதி!" என்று தீர்மானித்தார்களாம். ஆறு மாதத்திற்கு முன்பு வோட் எடுத்ததில் 100க்கு 50 பேர் தான் "ஜெர்மனியே சத்துரு" என்று தீர்மானித்தார்கள்.

ஆனால் இப்பொழுது என்ன வேடிக்கை பாருங்கள்! 100க்கு 54 பேர் "ஜப்பான்தான் முக்கிய விரோதி" என்று வோட் செய்திருக்கிறார்கள்.

இப்படி அமெரிக்கர் வோட் கொடுத்துக்கொண்டு போவதைப் பார்த்தால் நாளடைவில் 100க்கு 0 பேர் "ஜெர்மனி விரோதி" என்றும் 100க்கு 100 பேர் "ஜப்பான்தான் சத்துரு" என்றும் தீர்மானிக்கலாம்!


அமெரிக்க மகாஜனங்கள் இப்படித் தீர்மானித்தால் அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். அப்புறம் ஐரோப்பாவில் இரண்டாவது முனை ஏற்படுத்தவேண்டுமென்று கூச்சல் போட்டுக் கொண்டிருப்பவர்கள் பேசாமல் வாயை மூடிக் கொள்வார்களல்லவா?


---

**ஐந்து ரூபாய் பரிசு:** சென்ற இதழின் கால க்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர் "அவர் குட்டு வெளிப்பட்டது" என்பதை எழுதிய டி. எஸ். எஸ். மணி, 49, தெற்குத் தேர் வீதி, சிதம்பரம்.

# நிகழ்ச்சிச் சித்திரம்

-உம்மடி




மகாத்மா காந்தி உயிரோடிருக்கும் விந்தை பிரபல டாக்டர்களை யெல்லாம் திகைக்க அடித்திருக்கிறது.
வைஸ்ராய் நிர்வாகசபையில் பாக்கியுள்ள அங்கத்தினர் தங்கள் எஜமான் குரலைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
எதிர்காலம் ரொம்பத் துக்ககரமாக இருக்குமென்று லார்டு ஜோஸ்யம் சொல்கிறார்
எதிர் காலக் கண்ணாடி
காந்திஜியை விடுதலை செய்யஎடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் பலன் இல்லாமல்போனபின்
தலைவர்கள் பகவானைப் பிரார்த்தனை செய்வதைத் தவிர வேறுவழியில்லை என்று
தெரிவித்திருக்கிறார்கள்

# குற்றம் சாட்டுகிறோம்

சர்ச்சிலின் மீது குற்றம் சாட்டுகிறோம். பிரிட்டிஷ் மந்திரி சபை மீதும் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் மீதும் குற்றம் சுமத்துகிறோம்.

இந்திய சர்க்கார் மீது நாம் குற்றம் சாட்டவில்லை. ஏனெனில், இந்திய அதிகாரவர்க்கத்தை 'உணர்ச்சியற்ற ஜடம்' என்றும், 'இரும்பின் இயல்பும் மரத்தின் இயல்பும் பெற்ற இயந்திரம்' என்றும் மாண்டகு என்பவர் இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னாலேயே கூறினார். இந்திய அதிகாரவர்க்கம் இன்னும் அதே நிலைமையிலேயே இருந்து வருகிறபடியால், ஜடப்பொருள்மேல் குற்றம் சாட்டுவதில் பயனில்லை யென்று விடுகிறோம்.

ஆனால், சர்ச்சிலையும் மற்ற பிரிட்டிஷ் மந்திரிகளையும் பார்லிமெண்ட் அங்கத்தினர்களையும் பற்றி அவ்விதம் சொல்வதற்கில்லை. இவர்கள் எல்லாரும் அறிவும் உணர்ச்சியும் உள்ளவர்கள்.

எனவே, சர்ச்சில் முதலியவர்களின் மேல் "மனித தர்மத்தின் விரோதிகள்" என்று குற்றம் சாட்டுகிறோம்; "ஜனநாயகத்தைப் படுகொலை செய்து குழி தோண்டிப் புதைத்தவர்கள்" என்று குற்றம் சுமத்துகிறோம்.

மேற்படி சர்ச்சில் முதலியவர்கள் மனித தர்மத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காகப் பிராணனைக் கொடுப்பதாக அடிக்கடி சொல்லி வருகிறார்கள். இவர்களுடைய கூற்றின் உண்மையைச் சோதிப்பதற்கான ஒரு மகத்தான சந்தர்ப்பம் சமீபத்தில் ஏற்பட்டது. ஆனால் அந்தச் சோதனையில் அவர்கள் பயங்கரமாகத் தவறித் தோல்வி அடைந்து விட்டார்கள்.

மகாத்மாவின் மகத்தான உபவாச விரதம் ஆரம்பமானபோது, அவருக்கும் சர்க்காருக்கும் நடந்த கடிதப் போக்குவரவு வெளியாயிற்று. அந்தக் கடிதங்களிலிருந்து இரண்டு பிரச்னைகள் ஏற்பட்டன:

(1) மகாத்மாவை இந்திய சர்க்கார் அப்போது திடீரென்று கைது செய்து சிறையிலிட்டது நியாயமா?

(2) மகாத்மா முதலியவர்களைக் கைது செய்தபிறகு தேசத்தில் நடந்த விபரீத சம்பவங்களுக்கு மகாத்மாவும் மற்றக் காங்கிரஸ் தலைவர்களும் பொறுப்பானவர்களா?

மேற்படி இரண்டு கேள்விகளுக்கும் "இல்லை" "இல்லை" என்ற முடிவுதான் மகாத்மா—வைஸராய்க் கடிதப் போக்குவரவிலிருந்து ஸ்பஷ்டமாக ஏற்பட்டது.

இதற்குப் பிறகு, மேற்படி விபரீத சம்பவங்களுக்குக் காங்கிரஸ் தலைவர்கள் மீது பொறுப்புக் கட்டுவதற்காக இந்திய சர்க்கார் 86 பக்கம் கொண்ட ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். புதிய விஷயம் இதில் ஒன்றுமில்லை யென்று அவர்களே சொல்கிறார்கள். குப்பைக் கூடைக்கே லாயக்கான இந்தப் புத்தகத்தைத் தயாரிப்பதில் செலவான காகிதம் அவ்வளவும் வீண் விரயம் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இந்த நியாயா நியாயங்கள் எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். மகாத்மா உபவாசம் ஆரம்பித்த பிறகு ஏற்பட்ட நிலைமையைக் கவனிக்கலாம்.

## மனித தர்மம் எங்கே?

காந்தி மகான் எதற்காக உபவாசம் தொடங்கினார்? சிறையிலிருந்து விடுதலை கோரித் தான் உபவாசம் தொடங்கினார். எதற்காக விடுதலை கோரினார்? தம் மீதும் காங்கிரஸ் மீதும் சர்க்கார் சுமத்தியுள்ள அநியாயக் குற்றங்களை இல்லை யென்று நிரூபிப்பதற்குச் சந்தர்ப்பம் வேண்டி விடுதலை கோரினார்.

மகாத்மாவின் இந்தக் கோரிக்கையில் பிசகு ஒன்றும் நமக்குத் தோன்றவில்லை. ரொம்பவும் தர்ம நியாயமான கோரிக்கை யென்றே, கருதினோம்; கருதுகிறோம்.

இதுவும் போகட்டும். நியாயமோ, இல்லையோ, மகாத்மா பிடிவாதமாய் உபவாசம் ஆரம்பித்து விட்டார். நாள் செல்லச் செல்ல, தேசத்தில் ஏற்பட்ட மனக் கவலையையும், கொந்தளிப்பையும் சொல்ல முடியாது. ஏழெட்டு தினங்கள் ஆனபிறகு, மகாத்மாவைச் சோதித்த பிரபல டாக்டர்கள் ஆறு பேர் (சர்க்கார் டாக்டர்கள் உள்பட) "அபாயம்" "ரொம்ப அபாயம்" "உயிர் தப்புவது கடினம்" "பிழைத்தால் புனர் ஜன்மம்" என்றெல்லாம் அர்த்தம் தொனிக்கும் அறிக்கைகளை விடத் தொடங்கினார்கள்.

கோடிக் கணக்கான மக்களால் ''உலக சிரேஷ்டர்'' என்றும், ''அவதார புருஷர்'' என்றும் போற்றப்படுகிறவர் மகாத்மா காந்தி. மேனாட்டிலுங்கூட எத்தனையோ அறிஞர்கள் ''ஏசுநாதரின் போதனையை உள்ளபடி அனுஷ்டிப்பவர் மகாத்மா ஒருவர் தான்'' என்று மனமாரப் போற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மகானுடைய உயிர் ஒரு மயிர்க் காலில் கட்டுண்டு நின்றது. அந்த உயிருக்கு வந்திருந்த அபாயத்தை பிரிட்டிஷ் மந்திரிகள் மனது வைத்திருந்தால் உடனே நிவர்த்தி செய்திருக்கலாம். ஆனால், அவர்கள் மனது வைக்கவில்லை. மகாத்மாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காகக் கூட அவரை விடுதலை செய்ய முடியாது என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார்கள்!

இது மனித தர்மமா என்று கேட்கிறோம். இப்படிச் செய்தவர்கள் மேல், ''மனித தர்மத்தின் விரோதிகள்'' என்று குற்றம் சாட்டுவது பிசகாகுமா?

சரி; ஜனநாயகம் என்ன கதியாயிற்று என்று பார்க்கலாம்.

## ஜனநாயகம் எங்கே?

இந்தத் தடவை மகாத்மாவின் உபவாசத்தினால் இந்திய மக்கள் மனங் கலங்கியதுபோல் இதற்கு முன் எந்தக் காலத்திலும் எதற்காகவும் மனம் கலங்கியதில்லை. இம்முறை மகாத்மாவின் விடுதலையைக் கோருவதில் ஒற்றுமைப் பட்டதுபோல் இந்திய மக்கள் வேறு எந்தக் காரியத்துக்கும் இதற்கு முன் ஒற்றுமைப் பட்டது கிடையாது.

தேசத்தின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரையில் ஹர்த்தால்கள் நடந்தன; ஆயிரம், பல்லாயிரம் என்ற கணக்கில் சங்கங்களும் சபைகளும் மகாத்மாவின் விடுதலையைக் கோரித் தீர்மானம் செய்து விண்ணப்பங்கள் அனுப்பின.

இன்னும், இந்திய சரித்திரத்தில் இதுவரையில் நடைபெறாத ஓர் அதிசயம் நடந்தது. வைஸ்ராயின் நிர்வாக சபையிலிருந்து மூன்று இந்திய அங்கத்தினர் சர்க்கார் கொள்கையைக் கண்டித்து ராஜீநாமா செய்தார்கள்!

அப்புறம் தேசத்தின் பிரசித்தமான பிரமுகர்கள் — சகல துறைகளையும் சேர்ந்தவர்கள்—சுமார் மூந்நூறு பேர் டில்லியில் மகாநாடு கூடினார்கள். ''மகாத்மாவை விடுதலை செய்ய வேண்டும்'' என்று முதலில் வைஸ்ராயைக் கோரினார்கள். வைஸ்ராயின் ''இல்லை'' பதிலைப் பொருட்படுத்தாமல், பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கும் பார்லிமெண்டுக்கும் விண்ணப்பம் செய்தார்கள்.

பிரதம மந்திரி சர்ச்சிலுக்கு அனுப்பிய தந்தி விண்ணப்பத்தில் கையெழுத்திட்டவர்களின் பெயர்களைப் படித்தால் நமக்கு மூர்ச்சை போய்விடும்.

ஸப்ரு முதலிய மாஜி நிர்வாக சபை அங்கத்தினர்; ராஜாஜி முதலிய மாஜி மாகாண மந்திரிகள்; டாக்டர் மூக்கர்ஜி, டாக்டர் மூஞ்சே முதலிய ஹிந்து சபைக்காரர்கள்; ஸர் கஸ்நாவி முதலிய முஸ்லிம் பிரமுகர்கள்; டாடா முதலிய பெரிய முதலாளிகள்; ஜோஷி முதலிய தொழிலாளர் தலைவர்கள்; வர்த்தக சபைத் தலைவர்கள்; கம்யூனிஸ்ட் தலைவர்கள் — இப்படிப் பலதிறப்பட்ட பிரமுகர்கள் கையெழுத்திட்டு சர்ச்சிலுக்குத் தந்தி அனுப்பினார்கள். அவர்களுடைய பெயர்கள்—மாஜி பதவிகள்—பட்டங்கள் எல்லாம் தந்திச் செலவை அதிகமாக்குவதற்கே பயன்பட்டன!

''முடியாது'' என்று சர்ச்சிலும் பதில் அனுப்பி விட்டார். பாவம்! நிமோனியா படுக்கையிலிருந்தபடி இவ்வளவு சந்தோஷகரமான பதிலை அவர் சிரமப்பட்டு அனுப்பினார்!

மகாத்மாவின் விடுதலையை இந்தியாவின் நாற்பது கோடி ஜனங்களும் விரும்பினார்கள் என்று கூறினால் அது சிறிதும் மிகையாகாது.

டில்லியில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஒரு கூட்டம் போட்டு ''மகாத்மாவை விடுதலை செய்ய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்களாம். இந்திய உத்தியோகஸ்தர் யாராயிருந்தாலும், அவருடைய மனதிற்குள் பார்க்க முடியுமானால், ''மகாத்மா விடுதலை ஆக வேண்டும்'' என்ற ஆசைதான் அதில் கிடக்கும்.

இவ்விதம் நாற்பது கோடி ஜனங்களின் ஒருமுகமான விருப்பம் — கோரிக்கை — நிறைவேறவில்லை. இதற்கு மாறாக, ஒரு மாக்ஸ்வெல், ஒரு லின்லித்கோ, ஒரு அமெரி, ஒரு சர்ச்சில் இந்த நாலு பேருடைய பிடிவாதந்தான் நிறைவேறியது.

இது ஜனநாயகத்தைக் கொலை செய்வதில்லையென்றால், வேறு என்ன என்று கேட்கிறோம்.

# யாருடைய தேசம்?

மகாத்மாவை விடுதலை செய்யாததற்குச் சர்ச்சில் சொல்லும் ஒரு காரணம் எல்லாவற்றையும் தூக்கி அடிப்பதாயிருக்கிறது.

இந்தியாவைப் பகைவர்களிடமிருந்து பாதுகாக்கும் பொறுப்பு பிரிட்டிஷ் சர்க்கார் தலையில் சுமந்திருக்கிறதாம். மகாத்மாவை விடுதலை செய்தால் இந்தப் பொறுப்பை பிரிட்டிஷ் சர்க்கார் நிறைவேற்ற முடியாதாம்!

“இந்தியா யாருடையது” என்று கேட்கிறோம். சர்ச்சிலினுடையதா, சர்ச்சிலின் பாட்டனுடையதா?

இந்தியா, இந்தியர்களுடைய தேசமா, இல்லையா? இந்தியாவைப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றுவதில் இந்தியர்களுக்கில்லாத சிரத்தை சர்ச்சிலுக்கு என்ன வந்து விட்டது?

இந்தியாவின் நாற்பது கோடி ஜனங்கள் காந்தி மகானை விடுதலை செய்ய வேண்டும் என்று கூறும்போது, இந்தியாவின் பாதுகாப்புக்காக அவரை விட முடியாது என்று சொல்வதில் ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா? சிறிதேனும் அறிவுள்ளவர்கள் நம்பக்கூடிய பேச்சா?

ஜனநாயக தர்மத்தின்படி நடப்பதாயிருந்தால், மகாத்மாவின் உபவாச விரதம் பிசகாயிருந்த போதிலும், நாற்பது கோடி இந்திய மக்களின் கோரிக்கையை முன்னிட்டு மகாத்மாவை விடுதலை செய்திருக்க வேண்டும்.

அப்படிச் செய்யாதபடியால், சர்ச்சில் முதலியவர்கள் ஜனநாயக தர்மத்தைக் கொலை செய்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

எனவே, அவர்கள் மீது மேற்படி ஜனநாயகக் கொலைக் குற்றத்தைத் தயக்கமின்றிச் சுமத்துகிறோம்.

இந்த உலகத்துக் கோர்ட்டு எதிலும் நாம் நியாயம் கோரவில்லை. ஏனெனில், சர்ச்சில் முதலியவர்களை நியாய விசாரணை செய்யக் கூடிய கோர்ட் உலகத்தில் இப்போது கிடையாது.

எனவே, கடவுளின் கோர்ட்டில் மேற்படியார்கள் மீது மேற்படி குற்றத்தைச் சுமத்துகிறோம்.

வருங்கால மனித சமூகத்தின் முன்னிலையிலும் அவர்கள் மேல் குற்றம் சாட்டுகிறோம்.

இப்போது உடனே குற்ற விசாரணை நடந்து நியாயம் கிடைக்கா விட்டாலும், வருங்கால சரித்திரம் சரியான நியாயத் தீர்ப்புக் கூறுமென்று பூரணமாய் நம்புகிறோம்.

## கேட்டுப் பாருங்கள்!

மார்ச்சு 1௳ திருச்சியில் திருப்பாம்புரம் என். சுவாமிநாதப் பிள்ளை புல்லாங்குழல் வாசிக்கிறார்.

2௳ சென்னையில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி பாடுகிறார்.

அன்று திருச்சியில் மாலை 5-மணிக்கு காரைக்குடி வீணை சுப்பராமய்யரின் புதல்வி சங்கரி அம்மாள் வீணை வாசிக்கிறார்.

4௳ திருச்சியில் ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் கச்சேரி.

5௳ திருச்சியில் ஸ்ரீ டி. என். ராஜரத்தினம் பிள்ளை நாதஸ்வரம்.

அன்று சென்னையில் எம். எஸ். ரங்காராஜன் பாட்டு.

6௳ சென்னையில் 8-மணிக்கு “அறிவிக்கப்படும்” கச்சேரி; திருச்சியிலும் அஞ்சல். ஆகவே, ஸ்ரீமான் “அறிவிக்கப்படும்” பெரிய பாடகராய்த்தான் இருக்க வேண்டும்!

அன்று திருச்சியில் திருக்கோடிகாவல் கோவிந்தராஜப் பிள்ளை மத்தியானமும் சாயங்காலமும் ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமி பாடல்களைப் பொழிகிறார்.

7௳ சென்னையில் ஸ்ரீமதி ருக்மணி ராஜகோபாலன் பாட்டு இருக்கிறது; தவறாமல்



சாத்தூர் சுப்பிரமணியம்

கேட்கவேண்டியது. திருச்சியில் சாத்தூர் சுப்பிரமண்யம் கச்சேரியும் அப்படித்தான்.

8௳ திருச்சியில் பாப்பா வெங்கட்ராமய்யர் வயலின் கச்சேரி.

10௳ திருச்சியில் செம்மங்குடி நாராயணசாமி ஐயரின் வயலின் கச்சேரியும், “பாவை நோன்பு” என்னும் இசைச் சித்திரமும் நடைபெறுகின்றன.

# அக்கப் போர்


"காசி"

"இந்தியாவில் பத்திரிகைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சுதந்திரத்தைக் கண்டு நாங்கள் வியப்படைகிறோம்" என்று துருக்கியப் பத்திரிகைக் கோஷ்டித் தலைவர் கூறுகிறார். இவர் துருக்கி திரும்பியதும் "இந்தியப் பத்திரிகைகளைப் போன்றே எங்களுக்கும் சுதந்திரம் வேண்டும்" என்று கிளர்ச்சி செய்வாரென்று எதிர்பார்க்கிறேன்.

• • •

சர்ச்சில் ஆபிரிகாவுக்கு விஜயஞ் செய்ததன் ஞாபகார்த்தமாக ஆபிரிக்க சர்க்கார் அவருக்கு ஒரு சிங்கத்தைப் பரிசாக அனுப்பியிருக்கிறார்களாம்.

பிரிட்டிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனி இந்தியாவுக்கு விஜயஞ் செய்ததன் ஞாபகார்த்த



மாய் நமக்கு ஒரு வெள்ளை யானை*யைப் பரிசளித்திருப்பதை நாம் மறக்கவில்லை.

• • •

சென்ற சில தினங்களாகச் சர்ச்சில் துரைக்கு ஜலதோஷம் பிடித்திருப்பதைப் பற்றி ராய்ட்டர் ஸ்தாபனம் செய்தி மேல் செய்தி அனுப்பிக்கொண்டே இருக்கிறது.

சர்ச்சில் ஜலதோஷ விரதம் கைக்கொண்டிருக்கிறாரென்றும், ஸ்டாலின் ஜெர்மானியரை அத்லாந்திக் சமுத்திரத்துக்குத் துரத்தியடிக்கும் வரை அந்த விரதத்தைக் கைவிடப் போவதில்லையென்றும் கிளம்பியிருக்கும் வதந்திக்குக் கொஞ்சங்கூட ஆதாரமில்லை.

• • •

"இந்தியாவைத் தளமாகக் கொண்டு பர்மாவைத் தாக்குவோம். அப்புறம் சீனாவைத் தளமாகக் கொண்டு ஜப்பானையே தாக்குவோம்" என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறுகிறார்.



அதுவரையில் சீனர்கள் தங்கள் தேசம் எதிரி வசமாகாதிருக்க ஜப்பானிய டாங்குகளைத் தடிகளைக் கொண்டே தாக்கி நாசஞ் செய்து கொண்டிருப்பார்களாக!

• • •


"தேவையான அளவு அரிசி அகப்படாத குடும்பத்தினர் மற்றத் தானியங்களோடு தினசரி மூன்று ஆழாக்குப் பால் சேர்த்துக்கொண்டால் போதும்" என்று சென்னை மாகாண சுகாதார அதிகாரி யோசனை சொல்கிறார்.

"பால் என்னத்திற்கு? தங்க பஸ்பம் சேர்த்துக்கொண்டால் போகிறது" என்று எனக்குத் தோன்றுகிறது.

• • •


"அணே, சர்க்கார், ஸர் ஹோமி மோடி ஆகிய மூன்று ஹிந்து அங்கத்தினர்களும் நிர்வாக சபையிலிருந்து விலகி விட்டார்கள்" என்று லண்டன் டைம்ஸின் டெல்லி நிருபர் அந்தப் பத்திரிகைக்குச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

பார்ஸிக்காரரான மோடி தம் தலையில் உச்சிக் குடுமி வைத்துக்கொண்ட ரகசியத்தை



நம்மிடமிருந்து இத்தனை காலமாக ஏன் மறைத்து வைத்துக் கொண்டிருந்தாரோ தெரியவில்லை!

* இந்திய அதிகார வர்க்கத்துக்குக் காரணப் பெயர்.



இவைகளுடன் விளையாடாதே
இருமல்
ஜலதோஷம்
ஸிரோலின்
'ரோச்'
சாப்பிடு

# பிரம்மபத்திர உபாக்கியானம்

## (புகைப் படலம்)

ராஜீய பாகவதர் கதை

ஆதென கீர்த்தனாரம்பத்திலே மும்மூர்த்திகளில் ஒருவரும், சிருஷ்டி கர்த்தாவுமான பிரம்மாவாகப்பட்டவர், உலகத்திலே சகல ஜீவராசிகளையும் உற்பத்தி செய்யும் தொழிலை, உலகத்தில் நடக்கும் மகா யுத்தத்தை முன்னிட்டு, இன்னும் பதின்மடங்கு துரிதமாகச் செய்யத் தொடங்கினார். இப்படியாகத்தானே உலகத்துக்கு ஒன்றும் கம்பர் பிரகிருதிகளையும், வடிக் கட்டின பிரகஸ்பதிகளையும், வாட்ட சாட்டமான ரட்சகர்களையும் ஓயாமல் மூட்டை கட்டி அனுப்பி வரும் காலையில், தேவியான கலைவாணி அவருடைய பதியின் திவ்ய சதுர் முகங்களில் அடங்கிய வாய்களில் போட்டு அடக்கிக் கொள்வதற்காகக் கொண்டு வந்து கொடுத்த உபசார பத்திரமாகிய பிரம்மபத்திரத்தை பிரம்மாவாகப்பட்டவர் தம்முடைய திருக் கரங்கள் ஒன்றில் எடுத்து, ஆலமரத்தைப் பழிக்கும் தமது அகன்ற தொடையில் வைத்துப் பத்திரத்தைத் திருக் கரத்தால் இஸ்திரி போட்டுத் தடவிக் கொண்டிருக்கும் காலத்தில் மெதுவான அவரது தொடையில் அப் பத்திரம் நில்லாமல் வழுக்கி, சுருண்டு, உருண்டு தொபீர் என்று கீழே குதித்து நரலோகத்தை நோக்கிப் பயணமாயிற்று.

இப்படியாகத்தானே விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகத்திற்கு உல்லாச யாத்திரை செய்யத் தொடங்கிய காலையில் அக்னி பகவானாகப்பட்டவர் எதிர்ப்பட்டு பிரம்ம பத்திரத்தை ஆசீர்வதித்தார் — எப்படி ஆசீர்வதித்தார் :

“போய்வா இன்றே — போய்வா
மண்ணுலகம் ஏகி மானிடரிடை
மணம் வீசி
மன்னவர் மந்திரிகளுக்கு
முகாலங்காரமாக விளங்குவாயே !”

என்றுதானே ஆசீர்வதித்தார். அக்னி பகவானின் ஆசீர்வாதம் பெற்ற பிரம்மபத்திரமானது அக்கணமே ஓர் அலாதி தேஜஸைப் பெற்றுப் போகுமிடமெல்லாம் தூமகேதுவைப் போல் புகையைக் கிளப்பிக் கொண்டு சென்றது.

இதற்கிடையிலே பிரம்மாவாகப்பட்டவர் அயர்விலிருந்து திடுக்கிட்டு விழித்துப் பார்த்தார். பிரம்மபத்திரத்தைக் காணோம். “ஹா, எங்கேயடா?” என்று தம் கண்களை அஷ்ட திக்குகளிலும் திருப்பித் திருதிருவென்று விழித்தார். பிறகு ஞானதிருஷ்டியை ஏவிப் பார்த்ததில் பிரம்மபத்திரம் போன இடத்தில் புகை கிளம்பிக்கொண்டிருந்தது. “சரி, இந்தப் பிரம்மபத்திரத்துக்குச் சரியான சிக்ஷை செய்கிறேன்” என்று நினைத்த மாத்திரத்தில், அவர் அக்கணம் சிருஷ்டித்துக் கொண்டிருந்த ஒரு பிறவியின்மேல் கவனம் சென்றது. “ஆ! நீயே இக் கடமை செலுத்துவாய்! நீ பூலோகத்தில் ஜன்மமெடுத்ததும், அந்த பிரம்மபத்திரத்தை விடாமல் கௌவிக் கொள்வாயாக” என்றார்.



உடனே, அந்தப் பிரகிருதி, “சிருஷ்டி கர்த்தாவே, இத்தகைய கொடிய சாபத்திற்கு நான் ஏன் ஆளாக வேண்டும்?” என்று ஒரு பிரச்னையைக் கிளப்பியது.

பிரம்மா உடனே மனமிரங்கி “நீ செய்யாத குற்றத்துக்கு உனக்குத் தண்டனை விடுவது தகாது. ஆனால் அந்த பிரம்மபத்திரத்தை உனக்கே அளித்தேன். பூவுலகில் நீ எப்படி ராஜ

சபையை மதி மந்திரியாக அலங்கரிப்பாயோ, அப்படியே இந்தப் பிரம்மபத்திரம் உன் முகத்தை அலங்கரிக்கும். அதுவே உன் தோழன், சகோதரன், வஜ்ராயுதம் எல்லாம்'' என்று திருத்தப்பிரேரணையுடன் அனுப்பினர்.

அங்ஙனமே பூலோகத்தில் சுவேதகேதத்தில் பெரியார் குடும்பத்தில் அந்தப் பிரகிருதி வந்து ஸத் புத்திரனுக அவதரித்தது. அவதரிக்கும் போதே ஒரு தெய்விகப் புகை அக்குழந்தையின் முகத்தைச் சுற்றி உஜ்வலித்தது. அக் குழந்தைக்கு சரச்சிலன் என்ற நாமகரணம் செய்து, அன்னப் பிராசனம், சௌளம் இத்யாதி ஸம்ஸ்காரங்களை யதோக்தமாகச் செய்தார்கள். குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. சிறு வயதிலேயே, சாக்லேட், பிஸ்கோத்து முதலிய தின்பண்டங்களானாலும் அவைகளைச் சுருட்டி வாயிலடைத்துக் கொண்டு இழுத்துப் புகைவிடுவது போல் செய்து வந்தது குழந்தை. எல்லோரும் இந்த ஆச்சரியத்தைக் கண்டு பிரமித்தார்கள்; அதிசயக் குழந்தையாக இருக்கிறதே என்று மூக்கில் விரல் வைத்தார்கள். இதனாலேயே குழந்தையின் மூக்கும் சப்பையாகிவிட்டது. சரச்சிலருடைய ஜாதக விசேஷங்களைக் கணித்த ஜோசியர்களும் ''இந்த ஜாதகன் வாயால் நெருப்பைக் கக்குவான்'' என்று ஜோஸ்யம் கூறினர்கள்.

இப்படித்தானே நாட்கள் மாதங்களாயின; மாதங்கள் வருஷங்களாயின. வருஷங்கள் அரை நூற்றாண்டாயின. சரச்சிலரின் பெருமை உலகெங்கும் பரவிற்று. சரச்சிலர் ராஜ சபையில் அமைச்சரானாலும் ஆளுபவர் அவரே. அந்த சாம்ராஜ்ய சம்பிரதாயம் அது.

பிரம்மாவின் வாக்குப் பரிபாலனம் செய்து வந்த அவர், அந்த பிரம்ம பத்திரச் சுருட்டை என்றும் முகத்தின் மேல் தாங்கியவராய், புகைப்படலம் சூழத் தேஜோமய ஸ்வரூபியாய் எங்கும் காட்சியளித்து வந்தார்.

அந்த சமயத்தில் சுவேத கேதத்துக்கருகில் உள்ள அதிரூப கண்டத்தில் அரக்கர் பயம் அதிகரிக்கவே, அதைக்கண்டு தாளாத சுவேத கேதம் அரக்கர் மீது போர் தொடுத்து வந்தது. அரக்கருக் கேற்ற ஆசாமி யார் என்று பார்த்தார் மன்னர். சரச்சிலரைக் கூப்பிட்டு ''சரச்சிலரே, கொடிய அரக்கரை கவனிக்க நீரே வல்லவர்'' என்றார். வந்தார் சரச்சிலர் புகை சூழ.

அரக்கரோ மகா பலசாலிகள். அஸ்திர சஸ்திரங்களில் அவர்களை வெல்லுவது முடியாது. இவர் கையிலோ அஸ்திர சஸ்திரம் அதிகமில்லை. என்ன செய்வார்! வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். அதுபோல சரச்சிலர் அக்னியைக் கக்கிக்கொண்டு, பிரம்ம பத்திரமே ஜயம் தரும் என்ற நம்பிக்கையையும் அவர் முக பூஷணமாகிய அந்த அபூர்வச் சுருட்டையும் கைவிடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அலட்சியமாக அரக்கர்களையும் அசுரர்களையும் பாமரர்களையும் பராதீனர்களையும் எதிர்த்து நின்றார்.

இப்படிப்பட்ட வீர தீரத்தைக் கண்ணாரக் கண்டு, வாயாரப் போற்றிக் கையாரச் சித்திரிப்பதற்காக, மெய்யர மொழிப் புலவர்களென்ன, பேனு முனை வீரர்களென்ன எல்லோரும் கண்ணைக் கசக்கிக்கொண்டு பேனுக்களை உதறிக்கொண்டு கிளம்பினர். சரச்சிலருக்கு வஜ்ராயுதமாகவும், காண்டீபமாகவும், பிரம்மாஸ்திரமாகவும் விளங்கிவந்த அந்தக் கருஞ்சுருட்டு, சரச்சிலரை விடப் பிரக்யாதி பெற்றது. அந்த முக பூஷணத்தை அங்குலம் அங்குலமாக, அணு அணுவாக வருணித்துப் போற்றத் தொடங்கினர் கந்தர்வர்களும், கலைமேதிகளும். இந்த அற்புதச்சுருட்டின் மொத்த நீளமென்ன, அகலமென்ன, பரிணாமமென்ன, பரிமளமென்ன, அக்னி நுனியென்ன அதிலிருந்து உற்பத்தியாகும் புகையென்ன, அதிலிருந்து உதிரும் நிருநீறென்ன இவை யாவும் அந்த மனிதர் மனதைக் கொள்ளை கொண்டன. இப்பேர்ப்பட்ட அற்புத ஆயுதாலங்காரதாரியாக இருப்பதைக் காண சுவேதகேதப் பிரஜைகள் மெய்ம்மறந்து போயினர். அந்த சமயம்,

மாடுமனை போனு லென்ன
மக்கள் சுதந்திரம் கேட்டா லென்ன,
மகாத்மா உபவாச மிருந்தா லென்ன
மனிதர் உயிர்தாம் போனு லென்ன
சுருட்டே
உந்தன் மகிமை ஓங்குதே சுருட்டே

என்று புளகாங்கிதர்களாகப் புகழ்பாடிப் போற்றிப் போற்றி வந்தார்கள்.

பவமான ............
.......... ஜயமங்களம்.

இந்த திவ்ய சரித்திரத்தைக் காதால் கேட்டவர்களுக்கும் மூக்கால் முகர்ந்தவர்களுக்கும் பிரம்மலோகத்தில் பிரத்தியேகமாக ஸோபாக்கள் ரிசர்வ் செய்யப்பட்டிருக்கின்றன. ஸர்வம் பிரம்ம மயம்.

---

காலதேச வர்த்தமானத்தை அநுசரித்துச் சமீப காலத்தில் சுருட்டுக்கு ஏற்பட்டிருக்கும் மகாத்மியத்தை உணர்ந்து, செய்யப்பட்ட உபாக்கியானம்.

# கம்பர் தரும் காட்சி

[ டி. கே. சிதம்பரநாத முதலியார் ]

## 39. பால்க்கடல்ப் பள்ளியை ஒன்றாய் விட்டவர் !

ராமன் காட்டுக்குப் புறப்பட்டு விட்டான் என்பது ஜனங்களுக்குத் தெரிந்து விட்டது. தெரு வழியாகப் போகிறான். ஜனங்கள் ஒரே படியாய் அலமலைகிறார்கள். சுற்றத்தார் ஆங்காங்கு மயக்கங் கொண்டவர்களாய் ஏங்குகிறார்கள். மற்றும் அன்பர்கள் கூட்டம் கூட்டமாகத் தொடர்ந்து வருகிறார்கள். இனி எங்கே போகிறான் ராமன் என்று பார்ப்போம்.

உயங்கி அந்நகர்
　　உலைவுற, ஒருங்குழை
　　　　சுற்றம்
மயங்கி ஏங்கினர்
　　வயின்வயின், வரம்பிலர்
　　　　தொட ர,
இயங்கு பல்லுயிர்க்(கு)
　　ஓர் உயிர் எனநின்ற
　　　　இரா மன்,—
தயங்கு பூண்முலைச்
　　சானகி இருந்துழிச்
　　　　சார்ந் தான்.

[உயங்கி அந்நகர் உலைவுற: அயோத்தி ஜனங்கள் மனம் உடைந்தவராய்ச் செயலழிந்து நிற்க: ஒருங்குழை சுற்றம்: ஒன்றாகப் பக்கத்தில் நெருங்கி வந்த சுற்றத்தார்; மயங்கி ஏங்கினர் வயின் வயின்: ஆங்காங்கு ஏங்கி நிற்க; வரம்பிலர் தொடர: மற்றும் பலர் தொடர்ந்து வர; இயங்கு பல உயிர்க்கு ஓர் உயிர் என நின்ற இராமன்: ஓடியாடித் திரியும் உயிர் வர்க்கங்களுக்கு — ஆடோ மாடோ மனுஷனோ — எல்லாருக்குமே ஆதாரமான உயிர் போலிருந்த ராமன்; தயங்கு பூண்முலை சானகி இருந்துழிச் சார்ந்தான்: ரத்தின ஆரங்கள் தரித்து உல்லாசமா யிருந்த சீதை யிருக்கும் இடம் வந்து சேர்ந்தான்.]

ஜானகியிருந்த இடத்துக்கு ராமன் எப்படி வருகிறான்? மர வுரி தரித்துக் கொண்டு வருகிறான்! விஷயம் அவளுக்கு விளங்கவில்லை. மற்றவர்கள் அழுது கொண்டு வந்தது அவளுக்கு இன்னும் குழப்பத்தைத் தந்து விட்டது.

அழுது தாயரோ(டு)
　　அருந்தவர் அந்தணர்
　　　　அர சர்
புழுதி ஆடிய
　　மெய்யினர் புடைவந்து
　　　　பொரு மப்,
பழுது சீரையின்
　　உடையினன் வரும்படி
　　　　பா ரா,
எழுது பாவைஅன்
　　னாள்மனத் துணுக்கமொ(டு)
　　　　எழுந் தாள்.

[அழுது தாயரோடு: தாம் முறை கொண்டாடுறவர்களோடு; அருந்தவர்: முனிவர்கள்; அந்தணர்: வைதிகர்கள் எல்லாரும் ஒரே அழுகையாய் அழுது; புழுதி ஆடிய மெய்யினர் புடை வந்து: மண்ணில் புரண்டவராய்ப் பக்கத்தில் வந்து; பொரும: விம்ம; பழுது சீரையின் உடையினன் வரும்படி பாரா: ஒவ்வாத மரவுரி தரித்தவனாய் ராமன் வருவதைப் பார்த்து; எழுது பாவை அன்னாள்: அருமையாய்ச் செதுக்கிய பதுமையோ என்று சொல்லும்படியான சீதை; மனத் துணுக்கமொடு: மனசில் ஒரு பயம் உண்டானவளாய் எழுந்தாள் — உட்கார்ந்திருந்தவள் அப்படியே எழுந்தாள். குறிப்பு: சீதை உட்கார்ந்திருந்ததையும் பிறகு திகைத்து எழுந்ததையும் கவிஞர் எப்படி அநுபவிக்கிறார் என்று நாம் கொஞ்சம் நின்று பார்க்க வேண்டும்.]

திகைப்போடு எழுந்த சீதையை மாமியர் கட்டித் தழுவிக் கொண்டார்கள். கண்ணீர் விட்டு, புலம்பவும் செய்கிறார்கள்.

எழுந்த நங்கையை
　　மாமியர் தழுவினர்,
　　　　ஏங் கிப்
பொழிந்த உண்கணீர்ப்
　　புதுப்புனல் ஆட்டினர்
　　　　புலம் ப,

அழிந்த சிந்தையின்
அன்னம்இ(து) என்னதென்(று)
அறி யான்,

வழிந்த நீர்நெடுங்
கண்ணினள் வள்ளலை
நோக் கா.

[அழிந்த சிந்தையின் அன்னம்: மனம் உடைந்தவளான சீதை; வழிந்த நீர் நெடுங் கண்ணினள்: ஒரேபடியாய் கண்ணீர் வழிந்து கொண்டிருக்க; வள்ளலை நோக்கா: ராமனது முகத்தைப் பார்த்தவளாய்.]

விஷயம் ஒன்றும் தெரியாதவளாய் ராமனைப் பார்த்துச் சீதை கேட்கிறாள்: "தசரத மன்னனுக்கு ஏதாவது நேர்ந்து விட்டதா? ஏன் இந்தத் துயரம் எல்லாம்?"

பொன்னை யுற்ற
பொலன்கழ லோய்!புகழ்

மன்னை உற்றதுண்
டோ? மற்றிவ் வன்துயர்

என்னை உற்ற(து)?
இயம்பென்(று) இயம்பினாள்:

மின்னை உற்ற
நடுக்குற்று மேனியாள்.

[பொன்னை யுற்ற பொலன் கழலோய்: பொன்னை அழுத்திய அழகிய கழலை அணிந்த ராமனே; புகழ் மன்னை உற்றது உண்டோ: உலகம் புகழ்கிற தசரதனுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டதா? மற்று இவ் வன் துயர் என்னை உற்றது: எல்லாரையும் ஆட்டுகிற இந்தக் கடுந் துயர் என்ன காரணம் பற்றியோ; இயம்பு என்று இயம்பினாள்: சொல் என்று சொன்னாள்; மின்னை உற்ற நடுக்குற்று மேனியாள்: மின்னலிலுள்ள நடுக்கம் போல் நடுங்கிய மேனியாள் — சீதை.]

சீதை கேட்ட கேள்விக்குப் பதிலாக ராமன் ஆரம்பிக்கிறான். "என்னுடைய அருமைத் தம்பி பரதன் சக்கரவர்த்தி யாகப் போகிறான்" என்று.

'பொருவில் எம்பி
புவிபுரப் பான்;ஈன்ற

இருவர் ஆணையும்
ஏந்தினென்; இன்று போய்க்.

கருவி மாமழைக்
கல்த்தடம் கண்டு,நான்

வருவென் ஈண்டு,—
வருந்தலை நீ' என்றான்.

[பொருவு இல் எம்பி புவி புரப்பான் : ஒப்பற்ற என் தம்பி ராஜ்யத்தை ஆளுவான் ; ஈன்ற இருவர் ஆணையும் ஏந்தினென் : தந்தை தாய் இருவரது ஆணையைத் தலையில் ஏந்தி யுள்ளேன் ; இன்று போய் : இன்றைக்குப் புறப்பட்டுப் போய் ; கருவி மாமழைக் கல்தடங் கண்டு : சதா மேகங்கள் விளைந்து கொண்டிருக்கிற மலைப் பிரதேசத்தைப் பார்த்துவிட்டு ; நான் வருவென் ஈண்டு : திரும்பி வருவேன் இங்கே ; வருந்தலை நீ என்றான் : அதற்காக நீ வருத்தப்படக் கூடாது என்றான்.]

இதைக் கேட்டாள் சீதை. நாயகன் காட்டுக்குப் போவதைப் பற்றி வருத்தமில்லை அவளுக்கு ; ராஜ்யத்தை இழந்து விட்டான் என்பது பற்றியும் வருத்தமில்லை.

நாய கன்வனம்
நண்ணல்உற் றான்என்றும்,
மேய மண் இழந்
தான்என்றும், விம்மலள் ;—
'நீவ ருந்தலை
நீங்குவென் யான்' என்ற
தீய வெஞ்சொல்
செவிசுடத் தேம்புவாள்.

[நண்ணல் உற்றான் : போகலுற்றான் ; மேய மண் இழந்தான் என்றும் : கைக்கு வந்த ராஜ்யத்தை இழந்து விட்டான் என்றும் ; விம்மலள் : துக்கப்படவில்லை ; நீ வருந்தலை நீங்குவென் யான் என்ற : நீ வருத்தப்பட வேண்டாம், நான் போய் வருகிறேன் என்ற.]

தன்னை விட்டுப் பிரிந்து போகிறான் ராமன் என்பதை அந்த சீதாலக்ஷ்மி எப்படித் தாங்கமுடியும்? ஆதியில் பாற்கடலில் பள்ளி கொண்ட விஷ்ணு மூர்த்தி, அந்தப் பாற்கடலை விட்டு அயோத்தியில் வந்து அவதரித்தான், லக்ஷ்மி தேவி என்ன செய்தாள்? அவளும் அவனுடனேயே பாற்கடல்ப் பள்ளியை விட்டு இங்கு வந்து, அவதரித்தவள் தானே! நெடுகிலும் பிரியாமல் இருந்தவள் அல்லவா!

துறந்து போம்எனச்
சொற்றசொல் தேறுமோ!
உறைந்த பாற்கடல்ச்
சேக்கை யுடன்ஒரீஇ,
அறம்தி றம்பும்என் (று)
ஐயன்அ யோத்தியில்ப்
பிறந்த பின்பும்,
பிரிவிலள் ஆயினள்.

[துறந்து போம் எனச் சொற்ற சொல் தேறுமோ : நம்மைத் துறந்து போய் விடுவான் என்று சொன்ன சொல்லைத் தாங்க முடியுமா? உறைந்த பாற்கடல் சேக்கை : ஒன்றாய்ச் சயனித்து வந்த பாற்கடலிலுள்ள ஆதி சேஷ சயனத்தை ; உடன் ஒரீஇ : ஒன்றாகவே விட்டு நீங்கி ; அறம் திறம்பும் என்று ஐயன் அயோத்தியில் பிறந்த பின்பு : தர்மம் சிதைவுற்று விடும் என்று எண்ணி ராமனாக அயோத்தியில் பிறந்த பின்பும் ; பிரிவிலள் ஆயினள் : பிரியாதபடி மிதிலையில் வந்து பிறந்தவள் அல்லவா? — துறந்து போம் எனச் சொற்ற சொல் தேறுமோ!]

அன்பினால் பிணிக்கப்பட்டுள்ள இதயங்களுக்குப் பிரிவு என்பதை எண்ணவே முடியாது. பிரிவு அவைகளுக்கு ஏற்பட்டதல்ல என்றே தோன்றும். தங்கள் சம்பந்தம் அநாதியாக அமைந்த சம்பந்தம் என்றும் தோன்றும். 'தொன்மை யுடையது தொடர்பு' என்பது பூர்வமான வாக்கு. இந்த உண்மையான உணர்ச்சியைக் கம்பர் மிகத் தெளிவாக உணர்ச்சியோடு எடுத்துக் காட்டி யுள்ளார் செய்யுளில்; அபூர்வமான உண்மையும் பாவமும் வாய்ந்தது செய்யுள்.

---

## இரைச்சல் நின்றுவிடும்!



"டாக்டர் ஸார், என் கணவருக்கு எப்போதும் காதில் ஒரு வித இரைச்சல் கேட்டுக் கொண்டே யிருக்கிறதாம். ரொம்ப சிரமப் படுகிறார்."

"அப்படியா? ஒரு மாஸத்துக்கு அவரை எங்கேயாவது போயிருக்கச் சொல்லுங்கள்!"

"அவரால் எங்கும் போக முடியாதே!"

"அப்படியானால் நீங்களாவது ஊருக்குப் போங்கள்."

# கதாநாயகி

" ரங்கன் "

ஒரு நாள் நான் புதிதாகப் பிடிக்க வேண்டிய ஒரு ஸினிமாப் படத்தைப் பற்றித் தீவிரமாக யோசனை செய்து கொண்டிருந்தேன். அப்போது எனது காரியதரிசி வந்து "சிங்காரி தங்களைப் பார்க்கவேண்டுமென்கிறார்" என்றார்.

"சிங்காரியா? அது யார்?" என்றேன்.

"யாரோ எனக்குத் தெரியாது. அவருக்கு நம்ம படத்தில் நடிக்க வேண்டுமாம்."

"மனுப் போடச் சொல்லும்"

"அவள் இதுவரை நாற்பது, ஐம்பது மனுக்கள் போட்டிருக்கிறாள். அவற்றிற்கு நாம் பதில் போடவே இல்லை."

"அப்படியானால் நான் ஒன்றும் செய்வதற்கில்லையென்று சொல்லிவிடும். ஆமாம்! இந்த அநாமதேயங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர எனக்கு வேறு வேலை கிடையாதா? நான் முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கிறேனென்று தெரிந்தும் என்னை எதற்காக வந்து இப்படித் தொந்தரவு செய்கிறீர்? உமக்கு அந்த ஸ்திரீ விஷயத்தில் ஏன் அவ்வளவு சிரத்தை? அவள் அழகாயிருக்கிறாளா?"

"ஆமாம்!"

"சிறு பெண்ணா!"

"ஆமாம்!"

"அவளை வரச் சொல்லும்" என்றேன்.

மறு நிமிடம் சிங்காரி உள்ளே வந்தாள். அவள் அழகாய்த் தானிருந்தாள். அவள் எனக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு "நான் தங்களுக்கு அதிகத் தொந்தரவு கொடுக்கவில்லை. நாலே வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன்" என்று ஆரம்பித்தாள். அவள் குரல் இனிமையாயிருந்தது.

"எனக்கு உதவி செய்ய யாருமில்லை. என் விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டு என்னைத் தாங்கள்தான் முன்னுக்குக் கொண்டு வர வேண்டும்" என்றாள்.

"நான் பட முதலாளி இல்லையே, அம்மா?" என்றேன்.

"தாங்கள் பட முதலாளி இல்லை, வாஸ்தவந்தான். ஆனால் தாங்கள் மனது வைத்தால் எனக்கு வேலை கிடைக்கும்."

இவ்வளவு அழகான பெண்ணை ஸினிமாவில் சேர்த்துக்கொள்ள எவ்வளவோ பேர் நான், நீ என்று காத்துக் கொண்டிருப்பார்களே. இவள் ஏன் நம்மைத் தொந்தரவு செய்ய வேண்டும் என்று எண்ணினேன். அதை அவள் ஊகித்தவள்போல் "இந்தப் படம் பிடிக்கும் தொழிலில் தாங்கள் ஒருவர்தான் யோக்யமான டைரக்டர் என்று கேள்விப்பட்டேன். ஆகையால்தான் தைரியமாக இங்கே வந்து தங்களைக் கேட்கிறேன்" என்றாள்.

"உன்னை எனக்கு முன் பின் தெரியாதே. ஏதாவது சில்லறை பார்ட்டு கொடுக்கலாமென்றாலும் அதற்கும் நடிகர்களை அமர்த்தியாய் விட்டதே" என்றேன் நான்.

"என்ன! சில்லறை பார்ட்டா?" என்று அவள் மிக அலட்சியமாகச் சொல்லி "நான் அதற்காக இங்கு வரவில்லை. நான் பிரதம நடிகையாக வேண்டும். நான் ஒரு படத்தில் கதா நாயகியா யிருக்க வேண்டும்" என்றாள்.

அவளுடைய இந்தப் பதிலைக் கேட்டு நான் வியப்படைந்து "என்ன, கதாநாயகி பார்ட்டா? பிரதம நடிகையாகவா? உங்களுக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்கிறது" என்று பரிகசித்தேன்.

"பைத்தியந்தான். நடிகப் பைத்தியம்" என்று தலையை யாட்டினாள்.

"சாதாரணப் பைத்தியமல்ல. நல்ல முற்றிய பைத்தியம். சற்று முன்பு ஏதாவது வேலையென்று கிடைத்தால் போதுமென்று சொன்னீர்கள். இப்பொழுது ஒரே படியாய்க் கதாநாயகியாய்த்தான் நடிப்பேனென்கிறீர்கள். ரொம்ப பேஷ்! நீங்கள் ஒன்று பயித்தியம் பிடித்தவரா யிருக்க வேண்டும். அல்லது நடிப்பில் ஒரு கற்றுக் குட்டியாய் இருக்க வேண்டும்."

நான் இப்படிச் சொன்னபோது அவளுக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! அவள் எழுந்திருந்தாள். அவள் கோபித்துக் கொண்டதும், எழுந்ததும் எவ்வளவு அழகாயிருந்தது! "ஆம். நான் நடிப்பதில் ஒரு கற்றுக் குட்டிதான். நான் எப்படிக் கற்றுக் குட்டி என்று சொல்கிறேன். எட்டு வயதானபோதே நான் நாடக மேடையிலேறி ஒரு பாய்ஸ் கம்பெனியில் நடிக்க ஆரம்பித்தேன். மற்றக்



குழந்தைகள் பள்ளிக்கூடம் போய்க்கொண்டும் விளையாடிக்கொண்டுமிருக்கும் காலங்களில் நான் கண் விழித்து நடித்துக் கொண்டிருந்தேன்.”

நானும் எழுந்திருந்து கையைக் கட்டிக் கொண்டு அறையில் உலாவினேன். அவன் சொல்லிக் கொண்டே போனான்:

“பதினான்கு வயது வரையில் நாடக மேடைகளிலேயே என் காலம் கழிந்தது. என் தகப்பனார் இறந்து விட்டார். அவர் இறக்கும்போது சரியான துணை இல்லாமல் நடிகத் தொழிலில் ஈடுபடுவது தவறென்றும் யாரையாவது விவாகம் செய்துகொண்டு விடும்படிக்கும் புத்திமதி கூறிச் சென்றார். இரண்டு வருஷம் வரையில் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தேன். போதாததற்கு நாடக மேடையும் க்ஷீணித்து விட்டதால் நான் அதைப் பற்றி அதிகம் எண்ணவில்லை.

“என் தகப்பனார் காலமானதிலிருந்து நான் என் சகோதரனுடைய ஆதரவிலிருந்து வந்தேன். அவனுக்கு இரண்டு மாதத்துக்கு முன்புதான் கல்யாணமாயிற்று. கல்யாணமான மறு தினமே அவன் மாமனாரும் மாமியாரும் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். அவன் முப்பது ரூபாயில் எங்கேயோ குமாஸ்தா உத்தியோகம் பார்க்கிறான். இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு எத்தனை பேர் சாப்பிட முடியும்? நான் அவனுக்குப் பாரமாயிருக்க விரும்பாமல் வீட்டை விட்டுக் கிளம்பிப் போய்விட்டேன். தனியாய்ப் போனதிலிருந்து நடிக்க வேண்டுமென்ற அவா அதிகமாயிற்று. இரண்டு மூன்று ஸ்டுடியோக்களில் முயற்சி செய்தேன். ஆனால் அங்குள்ளவர்கள் என்னுடன் கௌரவமான முறையில் பேசாததால் உங்களை அணுகினேன்.”

“நீ சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் டிராமா நடிப்பு வேறு, ஸினிமா நடிப்பு வேறு” என்று கூறினேன்.

“இந்தக் கதையெல்லாம் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். டிராமாவில் அழும்போது கண்ணால் ஜலம் விட்டால் ஸினிமாவில் அழும்போது காதால் ஜலம் விடுவார்களா? டிராமாவில் சந்தோஷத்தைத் தெரிவிக்க நடிகர்கள் சிரித்தால் ஸினிமாவில் அழுவார்களா?” என்று பிரசங்கம் செய்துகொண்டே போனான்.

நான் குறுக்கிட்டு “நீ நடித்ததை நான் முன் பின் பார்த்ததில்லையே” என்றேன்.

“நான் இப்போது ஏதாவது நடித்துக் காண்பிக்கட்டுமா? எந்த நாடகத்தில் எந்த இடம் வேண்டும்?” என்று கேட்டான்.

இந்த சமயம் சேவகன் வந்து, பராங்குசம் நாயுடு வந்திருப்பதாகச் சொன்னான். அவனைக் கழித்துக் கட்ட சந்தர்ப்பம் ஏற்பட்டதே என்று சந்தோஷத்துடன் அவனைப் பார்த்து, “நான் உன்னை மறக்கவில்லை. சமயம் ஏற்பட்டால் சொல்லி அனுப்புகிறேன்” என்றேன்.



"இது சம்பிரதாயமான பேச்சு. இப்பொழுது இரண்டில் ஒன்று நீங்கள் சொல்லா விட்டால் அப்புறம் என்னை அடியோடு மறந்து விடுவீர்கள்" என்று கெஞ்சும் பாவனையில் சொன்னான். என் மனது இளகிற்று. "சரி! அதோ அந்த அறையில் போய் இரு" என்று கூறிப் பக்கத்திலிருந்த அறைக்கு அனுப்பியதும் நண்பர் வந்தார்.

"**வா**ருங்கள், பார்த்து ரொம்ப நாளாய் விட்டது. நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்?" என்று வரவேற்று விசாரித்தேன். பராங்குசம் எங்கள் கிராமத்தில் பக்கத்து வீட்டுக்காரர்.

"இன்று காலைதான் வந்தேன். நீங்கள் ஏதோ வேலையா யிருந்தாப் போலிருக்கிறது, நான் வந்து கெடுத்து விட்டேன்" என்றார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. ராஜமன்னார் சௌக்கியமா?" என்று விசாரித்தேன். ராஜமன்னார் அவருடைய பிள்ளை. பம்பாயில் பெரிய வேலையிலிருக்கிறான்.

"சௌக்யம். அவன் கூட இங்கே வந்திருக்கிறான். அவன் விஷயமாய்த் தான் நான் இங்கே வரும்படியாயிற்று" என்றார்.

"அவன் விஷயமாகவா?"

"ஆமாம்! அவன் இங்கே ஒரு நடிகையைச் சுற்றிக் கொண்டிருக்கிறான்."

"என்ன? நமது ராஜமன்னாரா? இராது. நீங்கள் அவன் மீது தப்பபிப்பிராயங் கொண்டிருக்கிறீர்களோ, என்னமோ?"

"தப்பபிப்பிராயமா? அவன் அவளுடன் பழகுவதோடு நிற்கவில்லை. அவளைக் கல்யாணம் வேறு செய்து கொள்ளப் போகிறானாம்."

"நிஜமாகவா?" என்று ஆச்சரியப் பட்டேன்.

"அவன் இப்படியெல்லாம் நடந்து கொள்வானென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அவனைப்பற்றி எவ்வளவோ பெருமையடைந்திருந்தேன். அவன் தன் வாழ்க்கையை குட்டிச்சுவராடித்துக் கொள்ளப் போகிறான்" என்று பெருமூச்சு விட்டார்.

"தாங்கள் அவனுக்கு எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னீர்களோ?"

"எத்தனையோ சொல்லிப் பார்த்தாயிற்று."

"என்ன சொல்கிறான்?"

"அவன் அவளைத்தான் கல்யாணம் செய்து கொள்வேனென்று பிடிவாதமாயிருக்கிறான். ஆனால் இதில் ஒரு வேடிக்கை. அவள் அவனை விவாகஞ் செய்துகொள்ள மாட்டேனென்கிறாளாம்."

"அப்படியானால் ஆபத்தில்லை."

"நான் அப்படி நினைக்கவில்லை. அவள் பலே கெட்டிக்காரப் பேர்வழியாக இருக்க வேண்டும். கிராக்கி பண்ணிக் கொண்டால் தான் காரியம் சித்தியாகுமென்று அவள் வேண்டுமென்றே இப்படி செய்கிறாளென்று நினைக்கிறேன். அவன் சம்மதிக்காத வரையில் என் குடும்ப கௌரவத்துக்கு ஆபத்தில்லை. நான் என்ன பண்ணட்டும்? அவளை அவனைக் கல்யாணம் செய்து கொள்ளாமலிருக்க எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்" என்றார்.

"அவள் யார்?"

"அது யாரோ எனக்குத் தெரியாது' சிங்காரி என்ற பெண்ணாம்."

"என்ன! சிங்காரியா?"

"உங்களுக்கு அவளைத் தெரியுமா?"

"இதோ! அந்த அறையில் இருக்கிறாள். நான் அவளை அழைத்துக்கொண்டு வரு

கிறேன்" என்று சொல்லி விட்டு அந்த அறைக்குச் சென்றேன்.

"கொஞ்சம் இப்படி வாருங்கள்" என்று கூப்பிட்டேன். அவன் நாங்கள் இருந்த நாற்காலிக்கு வந்தான்.

"இவர்தான் ராஜமன்னாரின் தகப்பனார்" என்று அவன் எதிர்பாராத விதமாய்க் கூறினேன்.

அவன் என்னை ஒரு தினுசாகப் பார்த்துக் கொண்டே அவருக்குக் கும்பிடு போட்டான். அந்தப் பார்வையில் நான் அவனை அறிமுகப் படுத்திய விதத்தை அவன் விரும்பவில்லை யென்பதைத் தெரிவித்தான்.

"நீங்கள் இவருடைய பிள்ளையை விவாகம் செய்துகொள்ளப் போகிறீர்களாமே" என்று கேட்டேன்.

அவள் சற்றுத் தயங்கி "எனக்கு யாரையும் விவாகஞ் செய்து கொள்வதாக எண்ண மில்லை" என்றாள்.

"தங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டபோது இப்படி என்னை ஏமாற்று வீர்களென்று நான் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் நடிப்பையே பிரதானமாகக் கருதினால் எப்படி விவாகஞ் செய்துகொள்ள முடியும்? அப்புறம் உங்கள் புருஷன் நீங்கள் நடிக்கக் கூடாதென்று தடுத்து விடுவான். இது மாதிரி இரண்டுங் கெட்ட பேர் வழிகளுக்கு நான் உதவி செய்யத் தயாராயில்லை. நீங்கள் போய் வரலாம்" என்றேன்.

"நான்தான் அவரைக் கல்யாணஞ் செய்து கொள்ளப் போவதில்லையென்று கண்டிப் பாய்ச் சொல்லி விட்டேனே."

"அப்படியானால் அவனை என் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கிறாய்?" என்று பராங்குசம் வினவினார்.

"ஏன்? ஏனென்றால் நான் அவரைச் சிநேகிதராக மதிக்கிறேன். ஒரு பெண் ணிடம் எவ்வளவு ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு ஒழுங்காக நடந்துகொள்ளும் அவரைப் போன்ற ஒரு வனைநான் இதுவரை கண்டதில்லை."

"அப்படியானால் நீ அவனைக் காதலிக்க வில்லையா?"

"என்னைப் போன்ற ஓர் ஏழை, ஒரு நடிகையா யிருந்தவள் அவரைக் காதலிக்க வில்லை யென்று சொல்வது பரிகாசத்துக் கிடமா யிருக்கும். நான் அவரை மணக்க மறுப்பதற்குக் காரணம் எனக்கு நடிப்புக் கலையின் மேலுள்ள அதிகமான காதல்தான். எனக்குச் சிறந்த நடிகையாக, விளங்கவேண்டு மென்பதைத் தவிர வேறு ஒன்றிலும் ஆசையே கிடையாது. அப்படியிருக்க நான் அவரை எப்படிக் காதலிக்க முடியும்? நண்பராய் நினைத்துக் கொண்டுதான் பழகுகிறேன்."

"நீ அப்படி நினைத்துக் கொண்டிருக் கலாம். ஆனால் அவன் அப்படி நினைக்க வேண்டாமா? அவன் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டுதான் ஊரை விட்டுக் கிளம்புவேனென்று பிடிவாதமாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். ஏற்கனவே லீவு கிடைப் பதற்கு மிக சிரமப்பட்டது. அவன் மேலும் லீவு கேட்டிருக்கிறான். எல்லாம் உன்னால் தானே? நீ ரொம்ப நல்ல பெண்ணா யிருக் கிறாய். தயவு செய்து அவனை உன் வீட்டுக்கு வர வேண்டாமென்று சொல்லிவிடு" என்று பராங்குசம் கேட்டுக்கொண்டார்.

"அவர் என் வீட்டுக்கு வருவதே இல்லையே. சமுத்திரக் கரையிலோ பார்க்கு களிலோ நாங்கள் சந்தித்துப் பேசுவது வழக்கம். அவ்வளவுதான்" என்றாள்.

"நல்லதாய்ப் போயிற்று. மறுமுறை அவனைப் பார்க்கும்போது இனிமேல் சந்திக்க வேண்டாமென்று சொல்லி விடுங்கள். உங்க ளுடைய வருங் காலத்தை உத்தேசித்து நீங்கள் அப்படிச் செய்ய வேண்டும்" என்று நான் கூறினேன்.

"என்ன, என்னுடைய வருங்காலமா?" என்று அவள் ஏகத்தாளமாகக் கேட்டாள். ஏகத்தாளம் செய்வதென்றால் எப்படி இருக்க வேண்டுமென்று மற்ற நடிகர்கள் அப்பொழுது அவள் முகத்தை பார்த்துக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நான் இதற்குப் பதில் சொல்ல முடியாமல் தயங்கினேன். பிறகு சமாளித்துக்கொண்டு, "நான் சீக்கிரத்தில் ஏதாவது ஏற்பாடு செய் கிறேன்" என்றேன்.

"நான் பழகாததினால் மட்டுமே அவருடைய காதல் குறைந்து போய்விடுமா?" என்று கேட்டாள்.

"சொல்கிறபடி சொன்னால் காதல் கீதல் எல்லாம் பறந்து போய்விடாதா? அதுவும் ஒரு நடிகைக்கு இது பிரமாதமான காரியமா?"

"நீங்கள் பேசுவதைப் பார்த்தால் அவருக்கு என் மீது என்றென்றைக்கும் துவேஷம் ஏற் படும்படி நான் நடந்துகொள்ள வேண்டும் போலிருக்கிறது."

"ஆமாம்!"

"நான் ஒரு தகப்பன். என் மகன் மீதுள்ள வாஞ்சையால்தான் உன்னை இவ்வளவு தூரம் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். வேறு

சந்தர்ப்பமா யிருந்தால் உன்னை என் நாட்டுப் பெண்ணாகக் கொள்வதில் பெருமை யடைவேன். ஆனால் உலகத்தை யொட்டி நடக்க வேண்டி யிருக்கிறதல்லவா? நீ என் மீது இரக்கம் வைத்து அவனை மறந்துவிடு" என்று பராங்குசம் மன்றாடினார்.

"அவரை மறந்துவிடுவதா?" என்று கூறி அவள் கையால் கண்களை மூடிக்கொண்டாள். அவளால் துக்கம் தாங்க முடியவில்லை. "நான் இப்படித் தியாகம் செய்வதற்காக நீங்கள் எனக்கு என்ன செய்துவிட்டீர்கள்? எப்பொழுதோ ஏற்பாடு செய்யப் போவதாகச் சொல்வதுதானே!" என்று கேட்டாள்.

பராங்குசம் தம் சட்டைப் பையிலிருந்து மணிபர்ஸை எடுக்கப் போனார். நான் விழித்துப் பார்க்கவே பேசாதிருந்து விட்டார். நான் குறுக்கிட்டு "உங்களிஷ்டப்படி செய்யுங்கள். நீங்கள் அவனோடு பழகுவதை நான் தடை செய்ய முடியாது. உங்களால் அவனுடைய வருங்கால வாழ்க்கை, அந்தஸ்து எல்லாம் பாழாகப் போகிறது. எல்லாவற்றிற்கும் உங்களுடைய சுயநல ஆசைதான் காரணம். நான் உங்களுக்கு என்னாலானதைச் செய்கிறேன். என் வார்த்தையை நம்புங்கள்" என்றேன்.

அவள் சிறிது நேரம் பிரமை பிடித்தவள் போல் இருந்துவிட்டு "நான் அவரை இனி என்னைச் சந்திக்காதபடி செய்துவிடுகிறேன். அவரை என் வீட்டுக்கு அழைத்து வாருங்கள்!" என்றாள்.

"சரி" என்று ஒப்புக்கொண்டேன்.

அவள் சென்றதும் நான் பயித்தியம் பிடித்தவன்போல் "நல்ல வேளை, அவள் ராஜமன்னாரைக் கல்யாணஞ் செய்துகொள்ளப்போவதில்லை, கல்யாணஞ் செய்துகொள்ளப் போவதில்லை" என்று கூறிக் கூத்தாடினேன்.

"என்ன, என்ன?" என்று நண்பர் ஆச்சர்யத்துடன் கேட்டார்.

"நம்ப ராஜமன்னாரைப் பற்றி மட்டமாகக் கூறுகிறேனென்று நினைத்துக் கொள்ளாதீர்கள். சிங்காரி ஒரு பிறவி நடிகை! அவள் விவாகஞ் செய்துகொண்டால் நாட்டுக்கே நஷ்டம். நாடகக் கலைக்கே நஷ்டம்" என்று உற்சாகத்தோடு கூறினேன்.

* * *

அன்று மாலை ராஜமன்னாரைச் சந்தித்தோம். நான் அவனிடம் நல்லவார்த்தை சொல்லிச் சிங்காரியின் வீட்டுக்கு எங்களை அழைத்துக்கொண்டு போக ஏற்பாடு செய்தேன்.

இரவு எட்டு மணி சுமாருக்கு அவளிருக்குமிடம் போய்ச் சேர்ந்தோம். அவள் ஒரு மகா மோசமான தெருவில் ஒரு பழைய காலத்து வீட்டில் ஓர் அறையில் குடியிருந்தாள். ஆனால் நாங்கள் போனபோது அவள் அங்கேயில்லை. ஒரு கிழவி மட்டும் வந்து "வாங்க உட்காருங்க!" என்று எங்களை உபசரித்துவிட்டு "சிங்காரிக்கு நீங்க வரது தெரியாதுங்களா?" என்று கேட்டாள்.

"தெரியும்" என்றேன் நான்.

"அவ என் மவதான். உட்காருங்க?" என்று சொல்லிக் கீழே உட்கார்ந்தாள். நாங்களும் உட்கார்ந்தோம்.

சிங்காரியின் கெட்டிக்காரத்தனத்தை நான் மெச்சினேன். நாங்கள் வரும் சமயம் பார்த்து அவள் வேண்டுமென்றே வெளியில் போயிருக்கிறாள். தன் காதலன் தனக்கு மாமியாராக வரப்போகிறவளைப் பார்த்தால் கட்டாயம் அவனுக்குத் தன்மீது வெறுப்பு ஏற்பட்டுவிடும் என்று இந்தச் சூழ்ச்சி செய்திருக்கிறாள் என்று எண்ணி அவளைப் பற்றிப் பெருமையடைந்தேன்.

அந்தக் கிழவியைப் பார்க்கப் பார்க்க ராஜமன்னாரின் முகம் சுண்டிப் போயிற்று. அவனுக்கு அந்த அறையில் இருக்க இருப்புக் கொள்ளாமல் தவித்தான். வெளியில் போவதற்காகக் கூடக் கிளம்பி விட்டான்.

"சித்தப் பொறுங்க. வந்துடுவா" என்று சொல்லிக் கிழவி வெற்றிலை போட்டுக் கொண்டே பல அசம்பாவிதக் கதைகளைக் கூறத் தொடங்கினாள். நடுவில் தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள். திடீரென்று "நான் பாடி நீங்கள் கேட்டதில்லையே" என்று ஒரு பாட்டுப் பாட ஆரம்பித்தாள். அதைக் கேட்க சகிக்கவில்லை. இதையெல்லாம் பார்த்து ராஜமன்னாரின் மனது மாறிப் போய்விட்டதென்று ஊகித்தேன். ஆகவே சிங்காரி வருவதற்குள் போய்விடலாமென்று தீர்மானித்து "ராஜமன்னார், நாம் போகலாம் வா!" என்று எழுந்திருந்து நான் எல்லாருக்கும் முன்னால் கொஞ்சதூரம் சென்றேன். மறு நிமிடம் கிழவி பல்லைக் கடித்துக்கொண்டு என்னிடம் ஓடி வந்து, "ராஜமன்னாரா! என் மவளைக் கண்ணாலம் பண்ணிக்கணும்னு சொன்னானே, அந்தப் பயலா? அவளை அடிச்சிக்கிட்டுப் போகவா பாக்கிறான்?" என்று கோபமாகக் கேட்டுக்கொண்டே என்னிடம் வந்தாள்.

நான் அவளுக்குப் பதில் சொல்வதற்குள், "எனக்கு நடிக்கத் தெரிகிறதா?" என்று மெதுவாகக் கேட்டாள்.

என் காதுகளை என்னால் நம்ப முடியவில்லை. யார் சிங்காரியா? ஆம், சிங்காரிதான்! எங்களையெல்லாம் அவள் தன் நடிப்புத் திறமையால் ஏமாற்றிவிட்டாள். நான் சிறிது நேரம் பதில் சொல்ல முடியாமல் தத்தளித்து விட்டு பிறகு ஒரு கடிதத்தை எடுத்து அதில், "நான் இப்பொழுது பிடிக்கும் படத்தில் நீதான் கதாநாயகி" என்று எழுதிக் கொடுத்து விட்டு உரக்க "இதை உன் மகள் வந்தால் கொடு. நாங்கள் போய் வருகிறோம்" என்றேன். கிழவி அதை வாங்கிக்கொண்டே போனவள், "இந்தக் கழுதை கெட்ட கேட்டுக்குக் கல்யாணம் வேறயா! வரட்டும் சொல்கிறேன்" என்று பல்லைக் கடித்துக்கொண்டே போனாள்.

ராஜமன்னார் எழுந்திருந்தார். நானும் பராங்குசமும் காரியம் முடிந்ததென்று சந்தோஷப் பட்டோம். ராஜமன்னார் அந்தக் கிழவியிடம் போய் "ஏ! கிழவி! உன்னைப் போன்ற பிசாசிடமா என் சிங்காரி அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறாள். அப்படியும் அவள் எவ்வளவு உத்தமியா யிருக்கிறாள்? எவ்வளவு நல்ல குணமுள்ளவளா யிருக்கிறாள்? சிங்காரி இப்படிப்பட்ட கேவலமான தாயாரிடம் இருந்து வருகிறாள் என்பதை நினைக்கும் போது என் மனம் கலங்குகிறது. அவள்மீது எனக்குள்ள காதலும் மதிப்பும் அதிகமாகிறது. அவளைத்தான் நான் கல்யாணஞ் செய்து கொள்ளப் போகிறேன்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார்.

அப்புறம் என்ன நடக்குமென்று எனக்குத் தெரியும். அதேபோல் நடந்தது.

"நான்தான் சிங்காரி! தங்களை ஏமாற்ற முயற்சித்ததற்கு என்னை மன்னியுங்கள். நடிப்பில் நான் அதிக ஆசை வைத்துக் கொண்டிருப்பதாகத் தவறாக எண்ணி யிருந்தேன். இல்லை. இல்லை. தங்களுக்குப் பிறகுதான் எனக்கு உலகமெல்லாம். தாங்கள் என்னை விவாகஞ் செய்து கொள்வதா யிருந்தால் தங்களுடைய கௌரவத்துக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமாகும்படி நடந்து கொள்வேன்" என்று கூறி ராஜமன்னாரின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்!

நானும் பராங்குசமும் அதற்குமேல் உள்ளே யிருப்பது நாஸூக்காக இராதென்று வெளியே வந்து நின்று கொண்டோம்.

"இதென்ன அநியாயம்!" என்றார் பராங்குசம்.

"மோசம்" என்றேன் நான்.

"அவள் லட்சத்தில் ஒரு பெண்ணாக்கும்."

"அவள் ஈடு இணையற்ற நடிக திலகம்."

"ஆனால் என் மகளைக் கல்யாணஞ் செய்து கொள்ள மட்டும் சம்மதிக்கமாட்டேன்."

"பொய் சொல்லாதேயும். நிஜமாகவா? மனதைத் தொட்டுப் பார்த்துக்கொண்டு சொல்லும். அதோ உமது கண்ணில் ஒரு சொட்டுத் தண்ணீர் வருகிறதே" என்றேன்.

"உமது கண்ணில் இரண்டு சொட்டு வருகிறதே" என்று அவர் பதிலுக்குச் சொன்னார்.

ராஜமன்னாருக்கும் சிங்காரிக்கும் விவாகமாயிற்று என்று நான் சொல்ல வேண்டியதில்லை. விவாகமாகி இரண்டு வருஷமாகி விட்டது. இப்பொழுதெல்லாம் எனக்குப் பராங்குசத்தோடு போய்ப் பேசுவதற்குப் பயம். ஏனென்றால் மூச்சு விடாமல் தம் நாட்டுப் பெண்ணைப் பற்றிப் புகழ ஆரம்பித்து விடுவார். "சிங்காரிக்காகத்தான் வெயில் எரிக்கிறது. மழை பெய்கிறது" என்று சொல்லிக் கொண்டே இருப்பார். ராஜமன்னாரோ தன்னைப்போல் உலகத்தில் வேறு எவருக்கும் சம்சார பாக்கியம் கிடைத்திருக்க முடியாது என்ற கர்வத்துட னிருக்கிறார்.

நானோ நமது படங்களில் வரும் நட்சத்திரங்கள் நடிக்கும் அழகைப் பார்க்கும்போதெல்லாம் சிங்காரியை நினைத்துக் கொண்டு பெருமூச்சு விடுகிறேன்.

# தெரியாதுதான்!



*லக்ஷ்மி:—தங்கம், பச்சைக் குழந்தையைப் பனியில் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாயே! உடம்புக்காகுமா?*

*தங்கம்:—அது குழந்தைக்குத் தெரியாது அம்மாமி!*




★ குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சியைத் தரும் ★

★ டி. எஸ். ஆர். & கோ ★

வாஸனை திரவிய வியாபாரிகள், கும்பகோணம்

மதராஸ் ஸிடி ஏஜெண்டுகள்:

**புஷ்பவனம் ஸ்டோர்ஸ், பைக்ராப்ட்ஸ்ரோடு, திருவல்லிக்கேணி**

ஸ்டாக்கிஸ்டுகள்:

| சுவாமிநாதய்யர் அண்டு சன்ஸ்., | சாரதா ஸ்டோர்ஸ் | மெஸர்ஸ். சண்டிகா அண்டு கோ., |
|---|---|---|
| புதுக்கோட்டை | காரைக்குடி | முதல் அக்ரஹாரம், சேலம் |

# அற்புதம் நிகழப் போகிறதா?

**[ பி. ஸ்ரீ. ]**

மீன் தோன்றிப் பிராணிகளும் தோன்றி, மனிதன் தோன்றாத காலம். பகவான் பரம பதத்திலிருந்து இறங்கிக் கருடாரூடராக வந்து பார்வையிட்டார். வானத்தில் பறவைகள் பறந்துகொண்டிருந்தன. கடலில் மீன்கள் நீந்திக்கொண்டிருந்தன. காட்டில் மிருகங்கள் திரிந்து கொண்டிருந்தன. அந்தச் சிருஷ்டியாகிய அற்புதமே போதுமென்று தோன்றியது முதல் முதல்.

"ஆனால் பெரிய மீனுக்குச் சின்ன மீன் இரை; கழுகுக்குக் கிளி இரை—என்ற இந்தச் சட்டத்தை மாற்றி, அஹிம்ஸை—முறையில் வாழ்க்கை நடத்தக் கூடிய ஒரு பிராணி வேண்டாமா? அப்படி ஒரு பிராணியிருந்தால், அது நமது சிருஷ்டியின் சிகரமாகும்; நமது அருளுக்கும் ஒரு நல்ல சாட்சியாகுமல்லவா?" என்று நினைத்தார் பகவான்.

காட்டிலே காய் கனிகளைப் பறித்துக்கொண்டு குகைக்குள் ஓடும் ஒரு வகையான வாலில்லாக் குரங்கைப் பார்த்தார். "இந்தப் பிராணியை நாட்டிலே நல் வாழ்வு வாழும் பிராணியாகச் செய்யலாமா? மற்ற மிருகங்களைப் போல் இந்தப் பிராணிக்குக் கீழான பார்வையில்லை. சைவ போஜனம் செய்து வருகிறது. வாலோ போய்விட்டது; கூனையும் போக்குவோம்: ஐயோ, பாவம்! இந்த இரண்டு நஷ்டங்களுக்கு எதிராக லாபக் கணக்கிலே ஒன்றாவது காட்டவேண்டாமா?" என்று ஆலோசித்து, 'மூளை பெருகுக!' என்று ஆசீர்வாதித்தார். அதனால் அந்தப் பிராணிக்கு மேலான கருத்து — மேலான பார்வை — ஏற்படுமென்று நம்பினார். ஏன்? அவர் அந்த உத்ஸாகத்திலே, "இந்தப் பிராணி நம்முடைய சாயலிலே அமைந்துவிடும்; நம்முடைய பரமபத ராஜ்யத்தை மண்ணுலகிலும் ஸ்தாபித்து விடும்!" என்றுகூட நம்பிவிட்டார்.

வால் குறுகிக் கூன் நிமிர்ந்து மூளை பெருகிய 'வானர' ஜாதிக்கு வழி காட்டத்தான் எத்தனை அவதார புருஷர்களை அனுப்பி வைத்தார்! அவருடைய அதிகார முத்திரை தரித்த எத்தனை மதாசாரியர்கள், தூதர்கள், வந்து போனார்கள்! மகாகவிகள், பக்தமணிகள், தியாக புருஷர்கள், தீர்க்கதரிசிகள் எத்தனை! எத்தனை வேதசாஸ்திரங்கள், 'பைபிள்'கள் தோன்றின! எத்தனை அற்புதங்கள் நிகழ்ந்தன! வேதாந்த சித்தாந்த அற்புதங்கள் என்ன? விஞ்ஞான அற்புதங்கள் என்ன? அஹிம்ஸா தர்ம முறையிலும் ஓர் அற்புதம் நிகழலாகாதா?

* * *

இருபதாம் நூற்றாண்டு. இரவு நேரம். பகவான் தன்னந் தனியாகப் புறப்பட்டார் உலகம் சுற்றிப் பார்க்க. ஆம், தொழுது நின்ற கருடனையும் கவனிக்கவில்லை; ஆதிசேஷனையும் கவனிக்கவில்லை. சங்கு சக்கரங்களையும் தரித்துக் கொள்ளவில்லை. பாதசாரியாகவே ஓடி வந்தார். அவ்வளவு ஆத்திரம், அந்த வால் குறுகிக் கூன் நிமிர்ந்து மூளை பெருகிய 'வானர' ஜாதி இந்த நூற்றாண்டிலே அடைந்திருக்கும் அபிவிர்த்தியை நேரில் பார்ப்பதற்கு. ஆம், ஆம்; அவ்வளவு ஆசை: அந்த மேலான வாழ்வைக் காண அவ்வளவு குதூகலம். பரமண்டலத்திலிருந்து அப்படியே துள்ளிக் குதித்தார் பூ மண்டலத்திற்கு.

அது ஒரு பெரிய நகரம். ஆனால் அந்தப் பெருகிய மூளையைக் கொண்டு கண்டுபிடித்த மின்சார ஜோதிகள் எங்கே? கீத வாத்திய விநோதங்கள் எங்கே? அக மகிழ்ச்சியும் முக மலர்ச்சியும் கவலையற்ற வாழ்க்கையும் எங்கே? ஒரே இருட்டடிப்பு — உள்ளும் புறமும். அபாயச் சங்கின் அலறல். குழந்தை குட்டிகளின் கதறல். விஷ வாயுவுக்குப் பயந்து முக மூடி தரித்துப் பாதுகாப்பான அரண்களுக்கு ஓடிப் பதுங்குகிறவர்கள். அவர்களைப் பார்த்ததும் பகவான் பிரமித்துப் போனார். "குகைக்குள் ஓடும் வாலில்லாக் குரங்குகளுக்கும், இவர்களுக்கும் பிரமாத வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லையே! இதுவோ நம்முடைய சாயல்? அந்தத் தாயாதிகளின் தத்ரூபமல்லவா?" என்று வருந்தினார். செந்தாமரைக் கண்கள் அதிகமாய்ச் சிவந்தன; செந்தாமரை முகம் வெட்கத்தாலும் சிவந்தது. "அது நகரமா? நரகம்தானா?" என்றே சந்தேகம் வந்து

விட்டது. இருப்புப் பாதைகளையும் தந்திக் கம்பிகளையும் விமானங்களையும் வெடி குண்டுகளையும் பார்த்துத்தான் இந்த வாலில்லாப் பிராணிகளும் ஏதோ ஒரு வகையில் அபிவிர்த்தி அடைந்து தான் இருக்க வேணும்'' என்று தோன்றியது.

அந்த ஊரை விட்டு வேறொரு ஊருக்கு ஒரு க்ஷணத்தில் மாயமாகப் போனார் பகவான். அங்கே ஒரு மாளிகை. அந்த மாளிகையில் இரண்டு நண்பர்கள். அவர்களில் ஒருவன் விஞ்ஞான ஆராய்ச்சிக்காரன். அவன் மற்றவனை நோக்கி, ''நண்பா! கடலில் மீன்கள் எப்படி வாழ்க்கை நடத்துகின்றன? — என்பது உனக்குத் தெரியுமா? நான் சொல்லட்டுமா?'' என்று கேட்டான். அதற்கு அந்த நண்பன், — அவன் ஒரு ராஜ தந்திரி — ''தம்பி! அது என்ன பிரமாதம்? நாம் நிலத்தில் வாழ்க்கை நடத்துவது போலத்தான் மீன்களும் நீரில் வாழ்க்கை நடத்துகின்றன. ஆம், 'பெரிய மீனுக்குச் சின்ன மீன் இரை' என்ற முறையில்!'' என்று சிரித்தான். பகவானுக்கோ அழுகை வந்து விட்டது. — ''இந்த இரு கால் பிராணிகளுக்கும், இந்த நூற்றாண்டிலும், அந்தச் சட்டம்தானா?'' என்று.

அங்கேயிருந்து வேறொரு நாட்டுக்குப் போனார். ஒரு மாணாக்கன் தன் தந்தையை நோக்கி ''அப்பா! கழுகு ஏன் கிளியைக் கொல்லுகிறது? பாவம்! கிளிக்கு வாழ உரிமையில்லையா?'' என்று கேட்டான். ''அதுவா? அடே, அது ஒரு அரசியல்–தர்ம சாஸ்திரம்'' என்றார் தந்தை. மாணாக்கனுக்கு ஒன்றும் புரியவில்லை. பகவானும் அந்தத் தர்ம சாஸ்திரத்தைத் தெரிந்து கொள்ள விரும்பி மறைவாக நின்றார்.

தந்தை அந்தக் கதையைச் சொன்னார்: ''ஒரு கழுகு கிளியின் கூட்டுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தது. 'என்ன வேணும், தர்ம ராசாவே!' என்று பயந்து கொண்டே பணிவாகக் கேட்டது கிளி. 'என் உரிமைகளின்படி உன்னை நான் தின்னப் போகிறேன்!' என்று கழுகு அதட்டிற்று. கிளி நடுங்கிக் கொண்டே, 'ஐயோ! ஏன் அப்படி? அது என்ன உரிமையோ? சுக வாழ்வும் சுதந்திரமும் எனக்கில்லையா?' என்று கேட்டது. கழுகு சொல்லிற்று: ''என் கூடு சிறியது; குழந்தை குட்டிகளோடு நான் சௌகரியமாக வசிப்பதற்கு அங்கே இடம் போதாது. என் வலிமையே என்னுடைய உரிமை — என்னுடைய சட்டம்! உன் பிறப்புரிமையைக் காப்பாற்ற உனக்குத்தான் வலிமை கிடையாதே! நீ மட்டமான ஜாதிதானே?''

அதை ஒரு அரசியல் – தர்ம சாஸ்திரம் என்று தந்தை சொன்னது, இப்போதுதான் அந்த மாணாக்கனுக்கும் கொஞ்சம் புரிய ஆரம்பித்தது. ''ஓஹோ! அந்தத் தர்ம சாஸ்திரத்தைத்தான் நம்முடைய அரசியல் வாதிகளும் அந்தக் கழுகினிடமிருந்து கற்றுக் கொண்டார்கள்! அப்பா! எனக்குக்கூட விளங்கிவிட்டதல்லவா?'' என்று சொன்னான் வாலிபன்.

தந்தையோ அமைதியாக, ''இதுதானா நீ படித்த படிப்பு? அந்தத் தர்ம சாஸ்திரத்தைக் கழுகுதான் நம்முடைய மந்திரிகளிடத்திலும் ராஜ தந்திரிகளிடத்திலும் கற்றுக் கொண்டிருக்க வேணும்!'' என்று பதில் சொன்னார்.

அந்தப் பிதா அப்படிச் சொன்னதும் பரம பிதாவாகிய பகவான், ''அந்தக் காட்டுச் சட்டத்தை நாட்டிலும் நிறைவேற்றி வைக்கத்தானா, இந்தப் பிராணிகளுக்கு வாலைக் குறுக்கிக் கூனை நிமிர்த்தி மூளையைப் பெருக்கிவைத்தோம்!'' என்று பச்சாத்தாபமடைந்தார். அந்தச் செந்தாமரைக் கண்கள் பனிச்சென்று கோபத்தாலும் சிவந்து விட்டன. ''சக்கராயுதத்தைப் பிரயோகித்து இந்த ஜாதியையே அழித்துவிடுவோமா?'' என்று கூட எண்ணினார். ஆனால் ''அந்த ஆயுதம் — நல்லவேளை! — கையில் இல்லை'' யென்பது ஞாபகத்திற்கு வந்தது.

''நமக்குத் தான் ஏன் அந்தக் கஷ்டம்? தன்னைத் தானே அழித்துக் கொண்டு வருகிறதே இந்தப் பிராணி! 'தன் வினை தன்னைச் சுடும்; நம்முடைய சக்கரத்திற்கும் மேலாகவே சுட்டுவிடும்!' என்று எண்ணிக் கொண்டே, பகவான் தம்முடைய கண்ணைச் சுழற்றி மேற்கேயிருந்து கிழக்கே வரை ஒரு பார்வை பார்த்தார்.

சிற்சிலர் சில சில மேடுகளின்மேல் நின்று கொண்டு, ''கொல்லுங்கள்; குத்துங்கள்; வெல்லுங்கள்; வம்ச நாசம் செய்யுங்கள்: இரத்தத்தைப் பெருக விடுங்கள்; கண்ணீரைக் கொட்டுங்கள்: இதோ நம்முடைய ஸர்வாதிகாரம்! அதோ நம்முடைய மகாராஜ்யம்!'' என்று கூவிக்கொண்டே உலகத்தை யெல்லாம் ஒரே மகா ஸ்மசானம் ஆக்கி வருகிறார்கள்.

கீழே இடுகிடு பாதாளம். சறுக்கி விழுந்தால் சஞ்சயனத்திற்கும் எலும்பு அகப்படாது. அந்தப் படு பாதாளத்தைச் சுட்டிக் காட்டிய வண்ணம் ஒரு பிசாசு அந்த மேடுகளில் தாவி நிற்கும் மேதாவிகளை நோக்கி, "இதோ இந்த மகா ராஜ்யத்தையும் தருகிறேன்; இதற்குக் கீழுள்ள மகாராஜ்யங்களையும் உங்களுக்கே கொடுத்து விடுகிறேன். கண்மணிகளே! வாருங்கள்; வந்து விடுங்கள்" என்று கொஞ்சுவதும், கெஞ்சுவதும், மன்றாடுவதுமா யிருக்கிறது.

பகவானுடைய செந்தாமரை முகம் ஒரே கவலையால் இரத்தம் சுண்டி வெளுத்துப் போய்விட்டது. "ஐயோ! இந்த மகா பயங்கர யுகத்திலும் நம்முடைய அருமையான தூதர் ஒருவரை அனுப்பி யிருந்தோமே!" என்பது பளிச்சென்று ஞாபகம் வர, அந்தத் திருவுள்ளம் பதறியது.

"மேலான பார்வை—மேலான லட்சியம்—மேலான வாழ்வு, செத்துப் போய்விட்டதா, இந்தப் பாழான பூமண்டலத்திலே! சீவனில்லாத மந்தை போலிருக்கிறதே மனித வர்க்கம்! மேய்ப்பவர்களே மந்தையை இப்படிச் சாக அடிக்கிறார்கள்,—வேலியே பயிரைத் தின்று விடுவதுபோலே! ஆனால் அந்த—நம்முடைய—தூதரின் முயற்சிகள்......." என்று எண்ணாததெல்லாம் எண்ணி அந்த நெஞ்சு புண்ணாயிற்று.

இந்தியாவை நோக்கியதும், நம்முடைய அருள் சுமந்த தூதரின் நிலையை நோக்கினார் பகவான். "ஆ, ஆ! செத்துக் கொண்டிருக்கும் மனித தர்மத்திற்கு இப்படியா பிராணப் பிரதிஷ்டை செய்யப் பார்க்கிறாய்? இப்படியா உயிர் கொடுக்கப் போகிறாய் இந்தியாவின் லட்சியங்களுக்கும், என்னுடைய கனவுகளுக்கும்? இப்படி அஹிம்ஸை—முறையிலே ஓர் அற்புதம் நிகழப் போகிறதா?" என்று ஏதோ ஸங்கல்பித்தார்.

சுமார் இருபது நூற்றாண்டுகளுக்கு முன் ஆசியாவின் வேறொரு பிரதேசத்திலே பிராணத் தியாகம் செய்த அந்த அவதார மூர்த்தியின் ஞாபகமும் வந்தது பகவானுக்கு.

இப்போது பகவத் ஸங்கல்பம் எப்படியோ?—என்று பக்தர்கள் கண்ணீரும் கம்பலையுமாய்க் கேட்கிறார்கள்.

---

## கவிச்சித்திர விளக்கம்

படைகளைத் திரட்டிக் கொண்டு யுத்த களத்துக்குப் பகையரசன் வருவான். வெண் கொற்றக் குடையொன்று பகையரசனிருக்கும் இடத்தைக் குறிக்கும்.


சேரனது போர் யானைக்குக் கள்ளையூட்டி அதை வெறி கொள்ளச் செய்து, யுத்த களத்திலே கொண்டுபோய் விட்டுவிடுவார்கள். அது அப்படியே ஓடி, எதிரிகளின் படைகளை யெல்லாம் மிதித்தெறிந்து குடையண்டை போய்விடும். போனதும், குடையைப் பிடுங்கித் தரையில் அடித்துச் சுக்கு சுக்காக நொறுக்கிவிடும்.

அடிக்கடி இந்த விதமாகக் குடையை முறிக்கும் காரியம் ஏற்படும். யானைக்கு இது ஒரு பழக்கமாகவே போய்விட்டது. அந்தப் பழக்கம் காரணமாக யானை செய்கிற காரியம் கவியில் கூறப்படுகிறது.


விறு சால் மன்னர் - படைகள் பெருத்த பகையரசரது. விரிதரு வெண்குடையை - விரிந்து கவிந்து முத்துச் சரங்கள் தொங்கவிட்ட வெண் குடையை. பாற எறிந்த பரிசயத்தால் - நொறுங்கிப் போகும்படி தரையில் அடிக்கிற பழக்கத்தால். தேறாது - விஷயம் தெரியாமல். செங்கண்மாக் கோதை - சிவந்த அழகிய கண்ணோடு கூடிய சேர அரசனது. சினவெங் களியானை - கோபத்தோடு கூடிய வெறி கொண்ட யானை. திங்கள் மேல் நீட்டும் தன் கை - சந்திரனைப் பகையரசனது குடை என்று எண்ணி, அதன் மேலேயே தன் துதிக்கையை நீட்டும் - விஷயம் தெரியாமல்த்தான்.

குறிப்பு:—யானையினுடைய கை உயர்ந்து நமக்குத் தெரிகிறது; செய்யுளிலும் அந்தக் கை தனித்து உயர்ந்து நிற்கிறது.


[ இந்தப் பாட்டும் விளக்கமும் டி. கே. ஸி. பதிப்பித்த "முத்தொள்ளாயிரம்" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை, பிரசுரம்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. ]



வீறுசால் மன்னர்
விரிதாம வெண்குடையைப்
பாற எறிந்த
பரிசயத்தால்—தேறுது,
செங்கண்மாக் கோதை
சினவெங் களியானை,
திங்கள்மேல் நீட்டும்தன்
கை.



கவிச் சித்திரம்—9 —முத்தொள்ளாயிரம்.




# பட்டணம் வேண்டாம்!

"சுலோ"

ஒரு காட்டில் ஒரு குருவி இருந்தது. அதற்குப் பத்து மினிமினிப் பூச்சிகள் சிநேகிதர்களாக இருந்தன. அந்தப் பத்து மினிமினிப் பூச்சிகளும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. அதாவது, அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகள்.

அந்தக் குருவி அதன் தாயாருடன் இரை தேட ஊருக்குள் சென்று வருவது வழக்கம். அது தான் பட்டணத்தில் கண்ட மோட்டார் வண்டி, டிராம் வண்டி முதலிய பல அதிசயங்களைப்பற்றி மினிமினிப் பூச்சிகளுக்குச் சொல்லும். அவற்றை மினிமினிப் பூச்சிகள் கேட்டு ஆச்சரியப்படும். நாளாக, நாளாக அவைகளுக்கும் பட்டணத்தைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று.

ஒரு நாளிரவு அந்த மினிமினிப் பூச்சிகள் தங்கள் பெற்றோருக்குத் தெரியாமல் சேர்ந்தாற்போல் பட்டணம் சென்றன. அங்கே ஒரு தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தன. அப்பொழுது "வெளிச்சத்தை மறையுங்கள்! வெளிச்சத்தை மறையுங்கள்!" என்று ஒரு ஏ. ஆர். பி. வார்டன் கத்தினார். மினிமினிப் பூச்சிகள் "இதென்ன வேடிக்கை! வெளிச்சத்தை மறைக்கிறதாவது!" என்று ஆச்சர்யப்பட்டன. ஏ. ஆர். பி. வார்டன் அவற்றை நோக்கி ஓடி வரவே, மினிமினிப் பூச்சிகள் பயந்து கொண்டு உயரச் சென்றன. அதைப் பார்த்த வார்டன் "எதிரி விமானம் வந்து விட்டுப் போகிறது!" என்று கூச்சல் போட்டார். ஆனால் அந்தக் கூச்சல் மினிமினிப் பூச்சிகள் காதில் விழவில்லை.

"பட்டணம் நன்றாகவே இல்லையே. பறந்து பறந்து, உடம்பெல்லாம வலிக்கிறதே. திரும்பிப் போய்விடலாமா?" என்று அண்ணா மினிமினிப் பூச்சி மற்றவைகளைக் கேட்டது. அதற்கு ஒரு சின்னத் தம்பி, "அண்ணா! அதோ தெரிகிறதே வெளிச்சம், அது அப்பா போலிருக்கிறது. போய்ப் பார்க்கலாமே" என்று சொல்லிற்று. உடனே எல்லாப் பூச்சிகளும், வெளிச்சம் வந்த இடத்தை நோக்கிச் சென்றன.



அவை போன இடம் ஒரு பெரிய

வீடு. அங்கே ஹாலி லிருந்த ஒரு மேஜை யின் மேல் மினிமினிப் பூச்சிகள் வந்து உட் கார்ந்தன. மேஜையின் மேலிருந்து திடீரென்று வெளிச்சம் வருவதைப் பார்த்த அந்த வீட்டி லுள்ள பாட்டி, குழந் தைகள் தான் ஏதோ விஷமம் செய்கிறார்கள் என்று நினைத்து, "ஏண்டா பசங்களா! நெருப்புக் குச்சியைக் கிழிச்சு விளையாட றேளே! மேலே கீலே சுட்டுக்கப் போறேன்" என்றாள்.



இதைக் கேட்ட மரு மகள் "நெருப்புப் பெட்டியை வீணாக்க றேளா?" என்று விசிறிக் காம்பை ஆட்டிக் கொண்டு மேஜையின் பக்கத்தில் வந்து பார்த் தாள். ஆனால் அந்த வெளிச்சத்துக்குக் காரணம் மினிமினிப் பூச்சிகளென்று தெரிந்ததும், தன் காரி யத்தைக் கவனிக்கத் திரும்பிப் போய் விட்டாள்.

மினிமினிப் பூச்சிகளுக்குக் களைப் பாக இருந்ததினால் அவை மேஜையின் மேலேயே படுத்துத் தூங்க ஆரம்பித் தன. "யாரோ என்னைப் பிடிக்கி றாளே!" என்று கடைக் குட்டி மினி மினிப் பூச்சி திடீரென்று கத்தியது. உடனே எல்லாம் தூக்கத்தி லிருந்து எழுந்தன.

அந்த வீட்டு வாண்டு கோபு ஒரு மினிமினிப் பூச்சியைக் கையில் எடுத் துக்கொண்டு "அம்மா, விளக்காட் டமா சுடலையே இந்த வெளிச்சம்?" என்று காண்பித்தான். "எறிடா அதை! மினிமினிப் பூச்சியைத் தொட் டால் வியாதி வருமடா" என்று அம்மா கோபித்ததும்தான், அதைக் கீழே எறிந்தான்.

அந்த மினிமினிப் பூச்சி மற்றவைக ளுடன் சேர்ந்ததும், "எனக்குப் பட்ட ணம் வேண்டாம்! அம்மாவிடம் போகணும்" என்று அழுதது. எல்லாம் குருவியை வைது கொண்டே ஊருக்குக் கிளம்பின.


**வ**ழியில் தங்களுக்குப் பட்டணத் தின் பெருமையைப் பற்றிச் சொன்ன குருவியை அவை சந்தித்தன. அப் பொழுது அவற்றிற்கு வந்த கோபத் தைப் பார்க்க வேண்டுமே! சின்னப் பூச்சி குருவிக்கு அழகு காட்டிற்று. அண்ணா பூச்சி "குருவியே, குருவியே! நாங்கள் கஷ்டப்பட வேண்டுமென்று தானே பட்டணம் போகச் சொன் னாய்! உன்னை என்ன பண்ணுகிறோம் பார்!" என்று பயமுறுத்திற்று.

குருவி பயந்து போய் "நான் உங்க ளிடம் சொன்னபோது பட்டணம் என்னமோ நன்றாய்த்தா னிருந்தது. ஆனால் இப்போது மோசமாய்ப் போய் விட்டது. எனக்கே பிடிக்கவில்லை. அங்கே ரொம்பக் கஷ்டமாயிருக் கிறது" என்றது.

“அப்படிச் சொல்லு!” என்று எல்லாப் பூச்சிகளும் கத்தின.

“அங்கே எங்களுக்கு இப்போது பொறுக்குவதற்கு அரிசி இடைப்பதில்லை. சர்க்காரிலே அரிசியை அளந்து கொடுக்கிறார்களாம். ஆகையினாலே ஜனங்கள் மறந்துபோய்க் கூட ஒரு அரிசியை இறைப்பதில்லை. ஒரு வேடிக்கை கேளுங்கள். நான் போன வீட்டில் ஒரு காக்கை உட்கார்ந்து கத்திக் கொண்டிருந்தது. உடனே வீட்டிலிருப்பவர்கள் எல்லாம் கையில் கழியையும் கல்லையும் தூக்கிக்கொண்டு ஓடி வந்தார்கள். ஒரு பாட்டி “பொல்லாத காக்கையே! வீட்டில் உள்ள பேருக்கு மட்டும்தான் சர்க்கார் அரிசியை அளந்து கொடுத்திருக்கா. நீ கா, கா என்று கத்தி விருந்தாளிகளை வேறு கூப்பிடுகிறாயா?” என்று வைது கொண்டே ஒரு கல்லை விட்டெறிந்தாள். அது என்பேரில் படவிருந்தது. நல்ல வேளையாக நான் பறந்தோடி விட்டேன். பாட்டி அம்மா சொன்னது எப்படி?” என்று கேட்டது. எல்லா மினிமினிப்பூச்சிகளும் சிரித்தன. சிறிது நேரத்துக்கெல்லாம் அவை தங்கள் வீட்டுக்குக் கிளம்பின.

வீட்டுக்கு வந்தபோது தாயார், “கண்ணே! உங்களைத் தேடி அலையாத இடமில்லை. உங்களைப் பார்ப்பேனா என்றிருந்தேன். நீங்கள் ஒரு நிமிஷம் இல்லாவிட்டாலும், வீடு பிரகாசமாகவே இல்லையே” என்று குழந்தைகளைக் கட்டிக் கொண்டது. குழந்தைகள் எல்லாம் சந்தோஷத்தால் குதித்தன.



## மணிக் கதை—6.



போத்தல் பந்தில் தண்ணீரை நிரப்பி நாய் மேல் பீச்சப் போனதின் பலன்!



# காலக்ஷேபம்

## ஞாபக மறதி

**உபாத்தியாயர்** :—மனிதனை விடக் குரங்கிற்கு ஞாபக சக்தி அதிகம். மனிதனுக்கு மறதி ஜாஸ்தி.

**வகுப்பில் ஒரு பையன்** :—நான்கு கால்களினாலும் நடப்பதை மனிதன் மறந்து விட்டதிலிருந்தே தெரியவில்லையா! —சா. சுப்பிரமண்யம்.

* * *

## சுயநலம்

**டாக்டர் மனைவி** :—நீங்கள் ஏன் எல்லோரையும் காப்பி, டீ, சிகரெட் முதலியன குடிக்கக் கூடாதென்கிறீர்கள்?

**டாக்டர்** :—அப்பொழுதுதானே என் 'பில்' பணம் சரியாக வரும்?

—என். முத்தையா.

* * *

## வந்த காரணம்

ஒரு பாடகி புதிதாக ரேடியோவில் பாடப் போனாள். ரேடியோ காரியாலய உத்தியோகஸ்தர் அவளுக்கு ரேடியோ மைக்ரோபோனில் பாட வேண்டிய முறையைக் கூறி வரும் போது, "நீங்கள் இதற்கு முன் கச்சேரி செய்ததுண்டா?" என்று கேட்டார்.

"ஆகா! எத்தனையோ முறை."

"சரி; இப்போது நீங்கள் சபையில் யாரும் இல்லாமலிருக்கும்போதே, இருப்பதாகப் பாவித்துக் கொண்டு இங்கே பாட வேண்டும்.

"அப்படியும் எனக்குப் பல தடவை பாடிப் பழக்கமுண்டு. அதனால்தானே இங்கே வந்திருக்கிறேன்!......"

கே. வி. சீனு.

* * *

## கலக்கும் விஷயம்

**டாக்டர்** :—திடீரென்று தலையைச் சுற்றுகிறது; வயிற்றைக் கலக்குகிறது, என்கிறீரே. அபத்தியமாக எதையாவது சாப்பிட்டு விட்டீரா?

**நோயாளி** :—அதெல்லா மொன்றுமில்லை. சற்று முன்புதான் தங்களுடைய பையன் வந்து 'பில்'லைக் கொடுத்து விட்டுப் போனான்.

—கே. ஜே. லக்ஷ்மி.

## மறுக்காத விஷயம்

**கிருஷ்ணன்** :—நான் இப்போது எழுதியிருப்பதை எந்தப் பத்திரிகைக்கு அனுப்பினாலும் மறுக்காமல் ஏற்றுக் கொள்வார்கள்.

**ராமன்** :—அதென்ன அப்படி எழுதி இருக்கிறாய்?

**கிருஷ்ணன்** :—என்னைச் சந்தாதாரனாகச் சேர்த்துக் கொள்ளும்படி எழுதியிருக்கிறேன். —எஸ். ராமமூர்த்தி.

* * *

## விரோதி யார்?

**உபாத்தியாயர்** :—ஏண்டா ராமு! ஏன் சண்டை போடுகிறாய். 'விரோதிகளிடம் அன்பாயிரு' என்று நேற்றுத் தானே சொல்லிக் கொடுத்தேன்?

**பையன்** :—இவன் என் விரோதியல்ல, ஸார்! எனது சகோதரன்தான்!

—எல். எம். மொய்தீன்.

* * *

## பயமில்லை!

**எஜமானர்** (காவற்காரனைப் பார்த்து) :—இரவில் நாலைந்து திருடர்கள் ஆபீஸில் புகுந்துவிட்டால் நீ என்ன செய்வாய்?

**காவல்காரன்** :—நீங்க என்னைப் பத்தி பயப்பட வேண்டியதில்லேங்க. நான் எப்படியாவது தப்பி ஓடி விடுவேன்.

—து. ராஜகோபாலன்.

* * *

## நல்லதுதான்!




**வாதி** :—என் வக்கீல் எல்லா சட்ட புஸ்தகங்களையும் கரைத்துக் குடித்திருக்கிறார். அவரை உம்மால் அசைக்க முடியாது.

**பிரதிவாதி** :—ரொம்ப நல்லதாய்ப் போச்சு. என்னைக் குற்றவாளி என்று சொன்னால், 'சட்ட புஸ்தகங்களை எடுத்துக் காட்டும்' என்று தைரியமாய்க் கேட்பேன்.

—சீதா.


'ஆஸ்புரோ'
'ஸீல்டைட்'
பொட்டணம்
MADE IN ENGLAND
5 TABLETS
'ASPRO'
REG TRADE MARK
'ஆஸ்ப்ரோ'
வில்லைகள்
லக்ஷக்கணக்கான இந்தியர்களால் மெச்சப்படுகிறது.
நவீன வைத்திய சாஸ்திரத்தால் கண்டுபிடிக்கப்பட்ட
அபூர்வமான இந்தப் புதுமை



'ஆஸ்புரோ' பயப்படாமல் கொடுக்கக்கூடிய, அதி சீக்கிரம் குணப்படுத்தும், குடும்ப மருந்து என்று இந்தியா முழுதும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இருதயத்துக்கோ இரைப்பைக்கோ யாதொரு தீங்கும் அளிக்காது. 'ஆஸ்புரோ' பில்லைகள் ஆரோக்கியமளிக்கும் வண்ணம் கெட்டியாய் 'ஸீல்டைட்' பாக் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால்தான் 'ஆஸ்புரோ' பில்லைகள் ஈரம்படாமல் காக்கப்பட்டு உபயோகப்படுத்துகிற காலம் வரையில் மருந்து வீரியம் குறையாமலிருக்கின்றன. மூடப்படாத மாத்திரைகள் சீக்கிரம் குணம்கெட்டு தேகத்துக்குத் தீங்கையும் விளைக்கும். மழலையாயும் பரிசுத்தமாயும் உங்களுக்குக் கிடைப்பது 'ஸீல்டைட் ஆஸ்புரோ'; அது ஆக்கும் முறையில் கையாலேயே தீண்டப்படாதது. அளவுக்கு 3 பில்லைகள், ஜுரத்தைத் தணித்து, நோவை ஆற்றி குணப்படுத்தும் மருந்து வேறொன்றும் இவ்வளவு லகுவாய் கிடைக்காது.

**'ஆஸ்புரோ' மலேரியா ஜுரத்தைத் துரத்தியடித்து வலிகளையும் நோவுகளையும் உடனே நிறுத்தும்.**

2 பில்லைகள் மலேரியாவைச் சமனப்படுத்துகிறது.
2 பில்லைகள் 5 நிமிஷத்தில் தலைவலியை நிறுத்துகிறது
2 பில்லைகள் 10 நிமிஷத்தில் ஜுரத்தைக் குறைக்கிறது.
2 பில்லைகள் பல்வலியையும் மண்டைக்குத்தையும் உடனே நிறுத்துகிறது.
2 பில்லைகள் நரம்பு வலிகளை உடனே நிறுத்துகிறது.
2 பில்லைகள் ஆனந்தமான நித்திரையளிக்கும்.
2 பில்லைகள் சூதிர் நோவுகளை நிறுத்தும்.
2 பில்லைகள் கொப்பளித்தால் தொண்டைப் புண் ஆறும்.
2-3 பில்லைகள் ஜலதோஷம் அல்லது இன்புளுவென்ஸாவைத் தொலைத்துவிடும்.
2-4 பில்லைகள் லேவாதம், சுரம் பெரிச்சல், வாயுப்பிடிப்பு இவைகளைக் கண்டிக்கும்.



6 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள்: 1 மாத்திரை
3-6 வயதுள்ள குழந்தைகள்: ½ மாத்திரை
'ஆஸ்புரோ'வை குழந்தைகளுக்குக்கூட பயப்படாமல் கொடுக்கலாம்

**விலை :- 3 பில்லை 1 அணா. 30 பில்லை 10 அணா. எங்கும் கிடைக்கும்.**

தொண்டைப்புண் என்றால் 'ஆஸ்புரோ'வைக் கொப்பளியுங்கள்.

**டிஸ்ட்டிரிப்யூட்டர்கள்:-ஜெ. எல். மாரிஸன், ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிட்.**

த. பெ. 1870, சென்னை. டெலிபோன் 3126. மற்றும் கிளை ஆபீசுகள்.

B110-TM.

**ஆஸ்புரோ' இருதயத்துக்கோ வயிற்றுக்கோ தீங்கு செய்யாது**

# பிராதுதார்!

[ கோவை அ. அய்யாமுத்து ]

**ப**ல்லுக் குச்சியை வாயில் வைத்துக் கொண்டு, அரசமரத்து மேடையின் மீது அருணாசலக் கவுண்டர் கால்மேல் கால் போட்டுக்கொண்டு வீற்றிருந்தார். அப்பொழுது மண் வெட்டியைத் தோளில் சுமந்தபடி மாதாரிப் பூசாரி அவ் வழியே வந்தான்.

அருணாசலக் கவுண்டரைக் கண்டதும், தன் காலிலிருந்த செருப்பைக் கழற்றி விட்டான். முண்டாசையும், மண் வெட்டியையும் தரையில் வைத்தான். தலைகுனிந்து தன்னிரு கைகளையுங் கூப்பி, "சாமி" என்று வணங்கிய பின் செருப்பு, முண்டாசு, மண்வெட்டி ஆகிய மூன்றையும் கையில் சுமந்து கொண்டு பயபக்தியுடன் அடிமேல் அடி வைத்துத் தன் வழியே நடக்கலானான்.

"டேய்!" என்று அதட்டினார் அருணாசலக் கவுண்டர்.

தொப்பென்று எல்லாவற்றையும் கீழே போட்டு விட்டு, இரண்டு கைகளையுங் கட்டியபடியே கவுண்டரைப் பார்த்து நின்றான் மாதாரி.

மாதாரிப் பூசாரி எவருடைய பண்ணையிலும் நிலையான அடிமையல்ல. சேரியிலுள்ள காளி கோவிலின் பூசாரி அவன். அவனுக்காக இஷ்டமிருந்தால் — அல்லது யாராவது கூப்பிட்டால்—கூலி வேலைக்குச் செல்வான். மற்ற நாட்களில் காளிக்குப் பூசை செய்த நேரம் போக, மீதி நேரத்தில் அவனுடைய இரண்டு எருமைகளையும் ஓட்டிக் கொண்டு மேய்க்கப் போய் விடுவான்.

"எங்கடா போறே?" என்று கேட்டார் கவுண்டர்.

"புத்தி! புதுத் தோட்டத்துக்குக் கடலைக்காய் தோண்ட" என்றான் மாதாரி.

"நம்ப காட்டுக்குப் போடா."

"இல்லைங்க! நேத்தே அவங்க கிட்டே வாரேனு சொல்லி விட்டேன்."

"சொல்லி விட்டாப் போகனுமா! சத்திய கீர்த்தியாடா நீ?"

"எப்படிங்க எசமான்? எசமாங்க கிட்ட ஒரு வார்த்தெ சொன்னு—சொன்னபடி நடக்காத போனு?"

"சீ! நாயே! அதிகப்பிரசங்கி! மூடு வாயை."

மாதாரிப் பூசாரி உடல் நடுங்க நின்றான்.

"நீ நம்ம காட்டுக்குப் போறயா இல்லையா?" என்று 'அல்டிமேட்டம்' போட்டார் அருணாசலக் கவுண்டர்.

"இல்லீங்க! புதுத் தோட்டத்துக்கு" என்று கைகளைப் பிசைந்தான் பூசாரி.

"சரி, போ போ!—நான் உன்னைப் பேசிக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே கடுங் கோபத்துடன் எழுந்து சென்றார் அருணாசலக் கவுண்டர்.

அவர் போகும் வரை பேசாது நின்றிருந்து, பிறகு செருப்பையும் முண்டாசையும், மண் வெட்டியையும் எடுத்துக்கொண்டு இரட்டை வேலிக்கு நடுவே செல்லும் ஒற்றையடிப் பாதையில் வேகமாய் மறைந்தான் மாதாரி.



அருணாசலக் கவுண்டர்

* * *

**பு**துத் தோட்டத்து முத்துச்சாமிக் கவுண்டர் நற்குணமுள்ளவர்; பக்திமான்; படித்தவர்; பணத்திலுங் குறைவில்லாதவர். தமிழ் இலக்கண இலக்கியப்



முத்துசாமிக் கவுண்டர்

பயிற்சியுள்ளவர். நிகண்டு அவருக்கு மனப்பாடம். நைடதம் தண்ணீர் பட்ட பாடு. சேக்கிழார், கம்பர், இளங்கோ போன்ற புலவர்களின் கவிதைகளைக் கரைத்துக் குடித்தவர். அவர் தேவாரம் பாடினால் கல்லுங் கரையும். நாட்டு நடப்பிலும் நல்ல ஞானமுள்ளவர். அவருடைய இரண்டு குமாரர்களும் தந்தையைப் போலவே குணசீலர்கள் என்பதில் சந்தேகமில்லை.

"என்ன பூசாரி! பொழுது எங்கேர மாச்சு. நீ மென்ன..............." என்று சாவதானமாக வரவேற்றார் மாதாரியை.

"எசமான்! கொஞ்சம் நேரமாய்ப் போச்சு.........வழியிலே பனங்காட்டுப் பண்ணாடி வேறே..............." என்று வாயெடுத்தான் பூசாரி.

"அடே அப்பா! அருணாசலக் கவுண்டனா! விஸ்வாமித்திரனாச்சே!"

"ஆமாம் எசமான்! அவங்க காட்டுக்குப் போகும்படி சொன்னாங்க."

"ஏன். அங்கதான் போய் வேலை செய்யறதுதானே?"

"எசமாங்க கிட்ட வருவதா சொல்லிப் போட்டு அங்க போனா நல்லா இருக்குமா?"

"அதுக்கென்ன? இன்னைக்கு இங்கே வேலை செய். நாளைக்கு வேணுமானா அங்கே போ" என்று பேச்சை முடித்தார் முத்துச்சாமிக் கவுண்டர்.

மாதாரிப் பூசாரி அன்று முழுவதும் புதுத் தோட்டத்தில் வேலை செய்து விட்டுப் பொழுது போனபின் சேரி போய்ச் சேர்ந்தான்.

* * *

அன்றிரவு நடுச்சாமமிருக்கும். மாதாரிப் பூசாரி காளி கோவிலில் படுத்துக் கொண்டிருந்தான். அருணாசலக் கவுண்டரின் ஆட்கள் உள்ளே புகுந்து அவனை அடியடியென்று அடித்து வெளியே இழுத்தெறிந்து விட்டு, காளி கோவிலின் மேல் அக்னி பகவானை ஏவிவிட்டார்கள்.


கொத்துக்காரக் குமாரசாமிக் கவுண்டருக்கும் அருணாசலக் கவுண்டருக்கும் நெடுநாள் பகை. அவர் இதுதான் சமயமென்று இரவோடு இரவாய் மாதாரிப் பூசாரியை வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு பெரிய ஆஸ்பத்திரி போய்ச் சேர்ந்தார்.

டாக்டருக்கு நிறையப் பணங் கொடுத்து, பூசாரியை ஆஸ்பத்திரியில் சேர்க்கச் செய்து, சர்டிபிகேட்டும் பெற்று, பிராதும் எழுதிப் பூசாரியின் கை நாட்டுடன் மறு நாள் காலை போலீஸில் தாகல் செய்தார்.

சப் இன்ஸ்பெக்டரையும் குமாரசாமிக் கவுண்டர் கவனித்துக் கொள்ளவே, அவர் மாஜிஸ்ட்ரேட்டுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்று, பூசாரியின் வாக்கு மூலத்தைக் கேட்டுப் பதிந்து, கேஸையும் ரிஜிஸ்தர் செய்து, மேல் நடவடிக்கைகளை நடத்தினார்.

அருணாசலக் கவுண்டரும் அவருடைய கையாட்கள் காலாட்களும் வாரண்டில் பிடிபட்டு, ஜாமீனில் வெளி வந்து, கொத்துக்காரக் குமாரசாமிக் கவுண்டர் வகையருவுடன் கைகலந்தார்கள். மற்றொரு கேசும் முளைத்து, மாஜிஸ்டிரேட் கோர்ட்டில், வக்கீல்களின் வாச்சாலகத்தினால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருந்தது. இரண்டு தரப்புகளும், இரண்டு கேசுகளுக்கும் சாட்சிகளைச் சிருஷ்டித்துக் கொண்டிருந்தார்கள்.

முப்பது நாட்கள் வரை ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாய்க் கிடந்து, சுகமடைந்து வெளியில் வந்தான் மாதாரிப் பூசாரியும்.



மாதாரிப் பூசாரி

அருணாசலக் கவுண்டர் வகையரு பேர்கள்மீது மாதாரிப் பூசாரி தொடுத்திருந்த வழக்கின் விசாரணைத் தேதியும் வந்து, நேரமும் நெருங்கியது. கோர்ட்டு வாசலில் மேட்டுப் பாளையமே திரண்டு நின்றது. வக்கீல்கள் சாட்சிகளைத் தனித் தனியே தயாரித்துக் கொண்டிருந்தார்கள். மாதாரிப் பூசாரிக்கும் மூன்றாம் முறையாகப் பாடம் போதிக்கப்பட்டது.

மாஜிஸ்டிரேட்டும் வந்தார். கோர்ட்டு வராந்தாவைச் சுற்றிலும் ஒரே கூட்டம். அருணாசலக் கவுண்டர் வகையருப் பேர்கள் கைதிக் கூண்டில் வரிசையாக நிறுத்தப்பட்டார்கள்.

"பிராதுதார் மாதாரிப் பூசாரி!
பிராதுதார் மாதாரிப் பூசாரி!
பிராதுதார் மாதாரிப் பூசாரி!"

சேவகன் மூன்று முறையும் கூப்பிட்டாய் விட்டது. மாதாரிப் பூசாரி வரவில்லை.

"எங்கே பிராதுதார்?" என்றார் மாஜிஸ்ட்ரேட்.

நாலு பக்கமும் குமாரசாமிக் கவுண்டரின் ஆட்கள் ஓடினார்கள்; தேடினார்கள்.

"கோர்ட்டில் தான் இருக்கிறான் யுவர் ஆனர்! இதோ வந்து விடுவான்" என்றார் பிராஸிகியூட்டிங் இன்ஸ்பெக்டர்.

"ஐந்து நிமிஷங்கள் ஆகி விட்டதே" என்றார் மாஜிஸ்ட்ரேட்.

"எங்காவது தண்ணீர் குடிக்கப் போயிருப்பான். இதோ வந்து விட்டான்" என்றார் வக்கீல் ஐயாவும்.

மாதாரிப் பூசாரி வரவில்லை. கொத்துக்காரக் குமாரசாமிக் கவுண்டர்தான் உள்ளம் பதைக்க உள்ளே நுழைந்தார்.

"பியூன்! மறுபடியும் கூப்பிடு" என்று உத்தரவிட்டார் மாஜிஸ்ட்ரேட்.

அவனும் மூன்றுமுறை கத்தினான்.

"ஒரு நிமிஷம் பொறுங்கள்" என்று சொல்லிக் கொண்டே பிராஸிகியூட்டிங் இன்ஸ்பெக்டர் எழுந்து வெளியே சென்றார். இரண்டு போலீஸ் சேவகர்களும் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

"எங்கடா அவன்?"

"இப்போ—இங்கேதான் இருந்தான் எசமான்."

"போடா கழுதை! தேடிப் பாருடா."

கட்டிடமெல்லாம் தேடப் பட்டது. ஆனால் பிராதுதார் காணப்படவில்லை.

மாஜிஸ்ட்ரேட் பத்துப் பதினைந்து நிமிஷங்கள் வரை ஏதேதோ காகிதங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டர் எட்டி யெட்டிப் பார்த்து நின்று, கடைசியில் உள்ளே நுழைந்தார்.

"பியூன்! மறுபடியும் கூப்பிடு" என்றார் மாஜிஸ்ட்ரேட்.

சேவகன் கூப்பிட்டும் பிராதுதார் ஆஜராகவில்லை.

கேஸ் டிஸ்மிஸ் ஆயிற்று!

இச் சம்பவம் நடந்து வருஷம் ஒன்றாகிறது. அருணாசலக் கவுண்டருக்கும் குமாரசாமிக் கவுண்டருக்கும் இன்னும் போராட்டம் ஓய்ந்தபாடில்லை. மாதாரிப் பூசாரி அன்று போனவன் இன்று வரை மேட்டுப்பாளையத்தை எட்டிப் பார்க்கவே இல்லை. சென்ற கிருத்திகைக்குச் சென்றிருந்த புதுத் தோட்டம் முத்துசாமிக் கவுண்டர் மாதாரிப் பூசாரியைப் பழனி அடிவாரத்தில் கண்டு, "ஊருக்கு வா" என்று கூப்பிட்டாராம்.

"வேண்டாம் எசமான்! நம்மாலே ஊர் கெட்டது என்ற பேர் எனக்கு வேண்டாம்" என்று சொல்லி விட்டு மறைந்தானாம்.

அவர் வார்த்தையைப் பொய்யென்று தள்ளுவதற்கில்லை.

# பூர்ணப் பொலிவு



அஜந்தா குகை ஓவியங்கள் பெண்மை அழகின் பூர்ணப் பொலிவைக் காட்டுகின்றன. வீட்டிலே பெண் இருந்து தேயிலை வழங்கும்போது குடும்பத்திலே அதுபோன்ற மனத்திருப்தி ஏற்படுகிறது. பானம் அருந்துகிறவர்கள் உல்லாசமாகவும் மகிழ்ச்சியுடனும் அருந்துவதற்கு அவள் அருகிருப்பதே காரணம். குடும்பத்தில் எல்லோரும் ஒருமித்திருந்து தேயிலை அருந்துங்கள். அதுவே இன்பம்.

★

**டீ தயாரிக்கும் முறை:**—சுத்தமான தண்ணீரைக் கொதிக்கவைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப்போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு ஐந்து நிமிஷம் கழிந்து வடிகட்டி, பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.



## குடும்பத்திற்கு ஏற்ற

## ஒரே பானம் இந்தியன் டீ

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்ட்டாரால் வெளியிடப்பட்டது

IK-2009 TR


# குழந்தை வளர்ப்பு

"சசி தேவி"

குழந்தை வளர்ப்பது என்பது ஒரு கடினமான கலை என்றால், என்னைச் சிலர் பரிகாசம் செய்யக்கூடும். "இது என்ன பிரமாதமா? எல்லோரும் பூலோகத்தில் குழந்தை பெறவில்லையா? வளர்க்கவில்லையா?" என்று கட்சியாடலாம். என்னைப் பொறுத்த மட்டில் "சிசு வளர்த்தல்" என்பது ஒரு தெய்விகமான கலை என்றுதான் தோன்றுகிறது.

"ஈன்று புறந்தருதல் தாயார்க்குக் கடன், சான்றோனாக்குவது தந்தைக்குக் கடன்" என்பது ஒரு பண்டை காலையப் பழமொழியானாலும், சான்றோனாக்குவதில் தாயாருக்கும் (ஏன், தாயாருக்குத்தான்) முதல் கடன் என்றுகூடச் சொல்வேன். முன் கூறிய பழமொழி ஏற்பட்ட காலத்திலேயே "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்பதும் ஏற்பட்டிருக்கிறதல்லவா?

முன்னாளில் பாட்டிமார்களில் சிலர் "பேயும் வளர்க்கும் ஆறுமாசம், பின்னால் வளர்ப்பவன்தான் பெண்" என்று சொல்லுவார்கள். அது ஒரு அளவில் உண்மைதான். ஆறு மாதம், ஏன் ஒரு வருஷம் வரையில்கூட ரொம்ப சிரமப் படாமல் வளர்த்துவிடலாம். ஆனால் கடவுள் கருணையினால் வியாதி மாத்திரம் வராமல் இருக்க வேண்டும். அதன் பிறகு ஒன்றரை வயதுக்கு மேற்பட்டு எட்டு, ஒன்பது வயதுவரை வளர்ப்பதுதான் கடினம். அப்பொழுதுதான் தாயாருக்குக் குழந்தையின் உடலை வளர்ப்பதுடன், உள்ளத்தையும் தாராளம் மிகுந்ததாகவும் அன்பு நிறைந்ததாகவும் வளர்க்கும் பொறுப்பு ஏற்பட்டு வேலை இரட்டிப்பாகி விடுகிறது.



"அவளுக்கு என் மேல் அசூயை ......"

அந்தப் பருவத்தில் குழந்தைகளின் மனமானது, மிகவும் மென்மையானதாகவும், பார்ப்பவைகளையும், கேட்பவைகளையும், அப்படியே பற்றிக் கொள்ளும் தன்மை வாய்ந்ததாகவும் இருக்கும். பெரியவர்களை விடக் குழந்தைகள் தான் தங்கள் எதிரில் நடக்கும் செய்திகளை அப்படியே மனதில் படம் பிடித்துக் கொண்டு விடுவார்கள். அந்தப் பிராயத்தில் சொல்லும் கதைகளோ சிலருக்கு ஆயுள் பரியந்தம் கூட நினைவிலிருக்கும். ஆகையால் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளுக்கு நல்வழியைப் பழக்குவதற்காக, நம் நாட்டு வீரர்களின் கதைகளையும், பக்தர்களின் கதைகளையும் சொல்லவேண்டும்.

சில குழந்தைகள் தங்களுடைய தாயாரோ, பாட்டி, அத்தை, முதலியவர்களோ சொல்வதைக் கேட்டுக்கொண்டு "அவளுக்கு என் மேல் அசூயை, இவன் என்னைப் பார்த்துத் திருஷ்டி வைக்கிறான்" என்பவைகளைப் போன்ற பெரியதனமான ஆபாஸ மொழிகளைச் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். பெரியவர்கள் இம்மாதிரி பேசுவதே தப்பிதந்தான். என்றாலும் குழந்தைகள் எதிரில் பேசுவதால், அவர்களும் அதே மனப்பான்மையை அடைந்து விடுகிறார்கள். தங்களுடன் விளையாடும் தோழர்கள்கூடத் தங்களைப் பார்த்து அசூயைப்படுவதாகவும், திருஷ்டி வைப்பதாகவும் அவர்கள் மனதுக்குத் தோன்றி விடுகிறது. அம்மாதிரியான வாக்கியங்களுக்கு அர்த்தம் என்னவென்றே தெரிந்து கொள்ள முடியாத குழந்தைப் பருவத்தில் இவைகளெல்லாம் ரொம்பக் கெடுதலான பழக்கங்கள்.

சில தாயார்கள் வயது வந்த பிறகு கூடக் குடும்ப விஷயங்கள் ஒன்றுமே தெரியாதபடி குழந்தைகளை வளர்த்திருப்பார்கள். அப்படிச் செய்வதும் ரொம்பக் கெடுதல். சில தாயார்களோவெனில் குழந்தைகளிடம் தாங்கள் தங்கள் புக்ககத்தில் கஷ்டப்பட்டது பிறந்தகத்தில் கஷ்டப்பட்டது முதலியவற்றைச் சொல்லிக் குழந்தைகளின் மனதைக் கலக்கிவிடுவதும் உண்டு. அதுவும் பிசகான காரியம்.

ஒன்றும் தெரியாத பாலர்களுக்குத் தம் குடும்பப் பெரியோர்களின் நற்குணத்தையும் தருமகுணத்தையும் கூறி, "நீயும் அப்படி



தான் பட்ட கஷ்டத்தைப் பற்றிச் சொல்வது....

இருக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொடுப்பதுதான் முறையே தவிர அவர்களின் துர்க்குணத்தையும், கெட்ட விஷயங்களையும் சொல்லவே கூடாது.


குழந்தைதானே என்னும் அலட்சிய பாவத்துடன் சிலர் அவர்கள் எதிரில் சண்டை இடுவது, அல்லது குடும்பச் சச்சரவுகளைப் பற்றிப் பேசுவது வழக்கம். அவைகளைக் கவனித்துக்கொள்ளும் குழந்தைகள், தங்கள் சிநேகிதர்களுக்கு அவைகளைச் சொல்வதுடன் கூட நில்லாமல் தன் மனதில் "நாம் பெரியவனான பிறகு இவ்விதம்தான் சண்டை போட வேண்டுமாக்கும்'' என்னும் ஒரு தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்திக்கொண்டு விடுகின்றன. ஆகையால் இத்தகைய மனோபாவம் ஏற்படாமலிருக்கும்படி குழந்தைகள் எதிரில் நடந்துகொள்ள வேண்டும்.

சில தாயார்கள், நான்கு, ஐந்து வயது வரை குழந்தைகளை "தினமும் ஸ்வாமியைப் பூஜை செய்ய வேண்டும்'' என்று கட்டாயப் படுத்துவது உண்டு. தாயாரின் வாய்க்குப் பயந்துகொண்டு பூஜை செய்வதோ, புஷ்பம் சாத்துவதோ, செய்துவிட்டுக் கடனே என்று அறுத்துக்கொண்டு போகும். அவர்களுக்கே வயது வந்து "நம்மைப் படைத்த ஆண்டவனைப் பூஜிப்பது நம் கடமை'' என்பது தெரியும்போது செய்யும் பூஜையே சிறந்தது. கடமை என்று செய்வதற்கும், கடனே என்று செய்வதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. இம்மாதிரி கண்டித்துக் கடவுளை வழிபடச் செய்தால் சில குழந்தைகளுக்கு "சனியன் பிடித்த கடவுள் எதற்கு இருக்கிறார்?'' என்று கோபமும் வரும். தயாநிதியும், கருணைக் கடலுமான தெய்வம், அவர்களுக்குக் கொடுமை நிறைந்தவராகவும், இரக்கம் அற்றவராகவும் தோன்றிவிடக் கூடுமல்லவா?

சின்னஞ் சிறு குழந்தைகளுக்குப் பயமென்பதே இராது. பெரியவர்களிடம் பழகும்போதும், அவர்கள் மிரட்டும்போதும்தான் பயம் ஏற்படுகிறது. "இருட்டில் போகாதே, பூச்சாண்டி பிடித்துக் கொள்வான்'' முதலிய மிரட்டல்களைக் கேட்டு பயப்படக் கற்றுக் கொள்ளுகிறார்கள். பிறகு எவ்வளவு வயதானாலும், இருட்டின பிறகு அந்தக் குழந்தைகள் நகரவே மாட்டார்கள்.

தாயார்கள் குழந்தைகளைக் கண்டித்து வளர்க்கவேண்டியதுதான் என்றாலும், எடுத்ததற்கெல்லாம் "அப்படி நிற்காதே, ஓடாதே, சிரிக்காதே'' என்று பாடம் சொல்லிக் கொடுப்பதும் ஓயாமல் கண்டிப்பதும் பயன்படாது. சிறுகச் சிறுக சமயத்தில் சொல்லிக் கொடுக்கும் புத்திமதி தான் பலனைக் கொடுக்கும். எப்பொழுது பார்த்தாலும் அனாவசியமாகக் கண்டித்துக் கொண்டு இருந்தால் குழந்தைகளுக்கு "இந்த அம்மா ஒரு நாளாவது எங்கேயாவது போகமாட்டாளா?'' என்று வெறுப்புத் தட்டிவிடும்.

அஹிம்ஸை, ஜீவகாருண்யம், முதலிய குணங்கள் குழந்தைகளுக்கு இயற்கையாகவே இருக்கும். அவைகளை வளரவிடாது தடுப்பது கூடாது. வாசலில் பிச்சைக்காரனைக் கண்டால் ஒரு குழந்தைக்கு அவனுக்கு அரிசி போட வேண்டும் என்று தோன்றிக் குழந்தைப் புத்தியால் கொஞ்சம் அளவு அதிகமாகப் போட்டுவிட்டால் சில பெற்றோர்கள் அந்தக் குழந்தையை அடித்து, "அளவில்லை தெரியாமல் எவ்வளவு அரிசியை அள்ளிப் போடுகிறாய்?'' என்று கண்டிப்பார்கள். மறு நாள் அந்தப் பிச்சைக்காரனைக் காணும்போதே அந்தக் குழந்தை தானே அவனை அடித்து விரட்டப் பார்க்கும். "இவனால்தானே அம்மா நம்மை அடித்தாள்?'' என்ற எரிச்சல் உண்டாகிவிடும். வயதான பிறகும் ஏழைகளிடம் ஒரு விதமான வெறுப்புத் தோன்றிவிடுவது சகஜம். ஏழைகளிடம் அன்பாக இருக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு தாயாரும் தன் குழந்தைக்குப் போதிக்க வேண்டியது கடமை.



வாசலில் பிச்சைக்காரனைக் கண்டால் ......



"அம்மா கிடக்கிறாள்! நீ வாடா கண்ணே..."

வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரர்களைக் குழந்தைகள் கண்டபடி தூஷித்தால் உடனே பெரியவர்கள் குழந்தைகளைக் கூப்பிட்டுக் கண்டித்து வைக்க வேண்டும். உதாரணமாக, நான் குழந்தையாக இருக்கும் பொழுது, ஒருநாள் எங்கள் வீட்டு மோட்டார் ஓட்டியை "மாணிக்கம், இங்கே வாடா!" என்று கூப்பிட்டேன். இதை மாடியிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த என்னுடைய பாட்டனார் உடனே என்னைக் கூப்பிட்டு, "அவ்விதம் கூப்பிடாதேம்மா! 'வா' என்று கூப்பிட்டாலே போதுமே, எதற்காக 'வாடா' என்று ஒரு பட்டம் போட்டுக் கூப்பிடுகிறாய்?" என்று நாருக்காகக் கண்டித்தார். அது இன்னும் என் மனதில் பசு மரத்தாணிபோல் பதிந்து விட்டிருக்கிறது. நான் இப்பொழுதுகூட வாயால் அதிகமாக "அடா, புடா" என்று சொல்லுவதில்லை. தவறிச் சொன்னாலும் என்னை நானே கண்டித்துக் கொள்வேன்.

சில வீடுகளில் தகப்பனார் கண்டிக்கும் பொழுது தாயார் தலையிட்டுச் செல்லம் கொடுக்கிறாள். தாயார் மிரட்டும்பொழுது தகப்பனார் தலையிடுகிறார். இருவரும் கண்டிப்பான பேர்வழிகளாக இருந்தாலோ அத்தை அல்லது பாட்டி யாராவது அசட்டுச் செல்லம் கொடுத்து "அம்மா கிடக்கிறாள்! நீ வாடா கண்ணே" என்று அருமை வழியக் கொஞ்சிக் குழந்தைகளைக் கெடுப்பதும் உண்டு. உடனே அந்தக் குழந்தைகளுக்கு, "ஒருவர் கண்டித்தால் என்ன? மற்றவர்கள் சலுகை இருக்கிறது" என்ற தைரியம் உண்டாகி விடுகிறது. அதன் பயனாய் அவை நாளடைவில் கட்டுப்பாட்டுக்கு அடங்காமல் போய் விடுகின்றன. ஆகையால் குழந்தைகளை நல்வழியில் வளர்ப்பதில் வீட்டில் யாவரும் ஒரே மனதுடையவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

குழந்தைகள் ஏதாவது ஒரு பண்டம் வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கும். தாயார் "கொடுக்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டாலோ உடனே அழ ஆரம்பிக்கும். உடனே தாயார் "இந்தா எடுத்துக் கொள்" என்று கொடுத்துவிடுவாள். இதைவிடக் கெடுதலான பழக்கம் வேறு கிடையாது. அழுகையால் சித்தி பெறாத காரியமே இல்லை என்னும் எண்ணம் குழந்தைக்கு உண்டாகிவிடும். பிறகு எதற்கெடுத்தாலும் அழுகைப் பிரயோகம்தான். ஆகையால் தாய்மார்கள் ஒன்று குழந்தை கேட்டதை அது அழ ஆரம்பிக்கும் முன்பே கொடுக்கவேண்டும். இல்லையானால் கடைசிவரை சலுகை காட்டக் கூடாது. தன் அழுகை பயனற்றது என்று தெரிந்த பிறகு எந்தக் குழந்தையும் அழத் தொடங்காது. அழுகையற்ற குழந்தைகளே அகத்துக்கு அழகாக விளங்குவார்கள்.

"இவ்வளவு எழுதி இருக்கிறாயே! நீ உன் குழந்தைகளை எப்படி வளர்க்கிறாய்?" என்று நீங்கள் கேட்கிறீர்களா? நான் என்னால் முடிந்த வரைக்கும் அவற்றை நல்ல பழக்க வழக்க முன்னணையாகச் செய்யத்தான் முயன்று வருகிறேன்.

## அவர் என்ன செய்வார்?



நண்பர்:—டாக்டர் ஸார், நீங்கள் என் நண்பனை எப்படியாவது சொஸ்தம் செய்து விடுவதாகக் கூறினீர்களே, இப்பொழுது அவன் இறந்து விட்டானே! என்ன சொல்கிறீர்?

டாக்டர்:—நான் சொன்னபடி மருந்து சாப்பிட்டிருந்தால் இப்படி நேர்ந்திருக்காது.

நண்பர்:—நீங்கள் சொன்னபடி தான் மருந்து சாப்பிட்டான். ஒரு வருஷம் மருந்து சாப்பிட்டும் குணமில்லையே!

டாக்டர்:—ஓகோ! அப்படிச் சொல்லுங்கள் ஸார்! நான் இரண்டு வருஷமல்லவா சாப்பிடச் சொன்னேன்?

# ஞானதிருஷ்டி!

"வஸந்தன்"

[ஞானதிருஷ்டியின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் பின்வரும் சம்பவம், நேயர்களின் ஞான லாபத்தை உத்தேசித்துக் கீழே தரப்பட்டிருக்கிறது ]

*சேஷாத்திரி* :—என்ன ராமஸ்வாமி, இவ்வளவு சீக்கிரமாக இன்றைக்குக் கலாசாலைக்குப் புறப்பட்டு விட்டாய் !

*ராமஸ்வாமி* :—சீக்கிரமாக ஒன்றும் புறப்பட வில்லையே, சேஷாத்திரி ! நாழிப் பிறையைப் பார்த்துக்கொண்டு தான் புறப்பட்டேன்.

*சேஷாத்திரி* :—நாழியாவது, பிறையாவது ? என்ன இருந்தாலும் கடிகாரம் இருக்கிறதுபோல் ஆகுமா ? இந்த நாசமாய்ப் போகிற யுத்தம் வந்தாலும் வந்தது, வெளி நாட்டிலிருந்து கடிகாரம் வருவது அடியோடு நின்று போச்சு ! ஊரில் இருக்கிற கடிகாரம் எல்லாம் ஓட்டை !

*ரா* :—விட்டுத் தள்ளு சனியனை ! நம் ரிஷிகளெல்லாம் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டா இருந்தார்கள் ? நாமும் தான் யுத்தம் வந்தாலும் வந்தது, ரிஷிகள் மாதிரி ஆகிவிட்டோம். நமக்கு என்ன குறைச்சல் ?

*சே* (கருகருவென்று வளர்ந்திருக்கும் தாடியைத் தடவிக்கொண்டு முகத்தை விளக்கெண்ணெய் சாப்பிட்டது போல் வைத்துக் கொள்கிறான்) :— ஈச்வரா ! ஈச்வரா ! நாலு நாள் முன்னாடிதான் ஒரு சாண் நீளம் இருந்தது. இப்பொழுது ஒன்றரைச் சாண் வளர்ந்திருக்கிறதே, இதைப் போய் எப்படிக் குறைச்சல் என்று சொல்கிறது ?

*ரா* :—அதுக் கென்னடா பிரமாதப் படுத்துகிறாய் ? உன் முக லட்சணத்துக்கு இது எவ்வளவு நன்றாயிருக்கிறது !

*சே* :—பகவானே ! இந்த யுத்தத்தை இதற்குத்தானா கிளப்பி விட்டாய் ? பிளேடு கிடைக்காமல் தாடி மீசை வைத்துக்கொண்டு என் சிநேகிதனைச் சந்தோஷப் படுத்த வேண்டுமென்று !

*ரா* :—நீதான் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளேன் ......... ஓஹோ ! இப்பொழுதுதான் கண்ணாடி கிடையாதே ! ...... நீ கட்டிக் கொண்டிருந்த வேஷ்டியை உத்தேசித்தாவது ரிஷி மாதிரி இருக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறதோ, இல்லையோ ?

*சே* :—ஆஹா ! அதற்காகத்தானே இந்தத் துணிப் பஞ்சம் வந்திருக்கிறது !

*ரா* :—அதனால் எவ்வளவு ஷோக்காய்ப் போய்விட்டதென்றுதான் சொல்ல வந்தேன் !

*சே* :—(ஆச்சரியத்துடன் விழிக்கிறான்.)

*ரா* :—ஆஹா ! முழங்காலுக்கு மேலே வேஷ்டியும், அந்த வேஷ்டி நுனியைக் கழுத்தைச் சுற்றிப் பைராகி மாதிரி நீ கட்டிக் கொண்டிருப்பதும் என்ன வசீகரம் ! என்ன வசீகரம் !

*சே* (குறும்பாக) :—முந்தி நான் போட்டுக் கொண்டிருந்த 'புல் ஸூட்'டை விட இது அழகாயிருக்கிறதென்கிறாயா ?

*ரா* :—புல் ஸூட்டைக் கொண்டு போய் உடைப்பில் போடு ! உனக்கு எடுத்தது இந்த பைராகிக் கோலம் தான் ! நேத்திரானந்தம் ! நேத்திரானந்தம் ! ...... வாயேன் வேகமாக ! ஏன் அன்ன நடை நடக்கிறாய் ?

*சே* :—ஒன்றுமில்லை. கழுத்து முடிச்சு நழுவி விடும் போலிருக்கிறது ! இந்த மூட்டையைக் கொஞ்சம் வைத்துக் கொள். சரிப்படுத்திக் கொள்கிறேன்.



இந்த மூட்டையை வைத்துக் கொள்

[ராமசாமி மூட்டையை வாங்கிக் கொள்கிறான். சேஷாத்திரி உடையைச் சரிப்படுத்திக் கொள்கிறான்.]

ரா:—என்ன மூட்டையில்?

சே:—ஏடும் எழுத்தாணியும் வைத்திருக்கிறேன்.

ரா:—நேற்று நீ ஒரு எழுத்தாணியால் ஏதோ கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் அழகைப் பார்த்தேன். அப்படியே வியாஸ பகவான் பாகவதம் எழுதிக் கொண்டிருப்பதுபோல் இருந்தது! யுத்தம் மட்டும் வராவிட்டால்...... இந்த மாதிரி வைபவங்களைப் பார்க்க முடியுமா?

சே:—முடியாது. எழுத்தாணியால் எழுதிக் கையும் வீங்கும்படி இருக்காது. நகத்து இடுக்கில் 'குபுகுபு' என்று ரத்தம் வரும்படியும் இருக்காது.

ரா:—அட பித்துக்குளி! இப்பொழுது உலகம் பழையபடி உன்னதமான நிலைமைக்குப் போய்க் கொண்டிருப்பதாக எல்லோரும் சந்தோஷப் படுகிறார்கள். நீ என்னடா என்றால் மூக்கால் அழுகிறாய்! ஒவ்வொரு அம்சத்திலும் ஒவ்வொரு நாளும் நாம் மனு பகவான், வியாஸர் காலத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறோமென்று உனக்கு ஏன் தெரியவில்லை? பெரிய பெரிய மாளிகைகளில் டம்பமாக வசிப்பதற்குப் பதிலாக நம் முன்னோர்கள் மாதிரி பர்ண சாலைகளில் எளிய வாழ்வு நடத்துகிறோம். பணம் காசுக்குப் பதிலாகச் சிக்கனமாகப் பண்டமாற்று செய்து கொள்கிறோம்.

சே:—மோட்டார், ரயிலில் போவதற்குப் பதிலாக, காலால் நடந்து திண்டாடுகிறோம்.

ரா:—வீணாகப் பெரிய பெரிய கட்டடங்களில் பள்ளிக்கூடத்தில் படித்ததற்குப் பதிலாக ஆனந்தமாகக் குயில்கள் கூவும் சோலைகளில் கல்வி பயில்கிறோம்.

சே:—ஹாய்யாக பெஞ்சியில் உட்காருவதற்குப் பதிலாகக் கீழே உட்கார்ந்து முதுகு வலியால் உடம்பை நெளித்துக் கொள்கிறோம். இன்னும் சிற்சில மாறுதல்களும் உண்டாகி விட்டால் நிச்சயமாக நாம் அசல் வியாஸர் காலத்துக்குப் போய்விடலாம். உதாரணமாக நம் பெயர் சேஷாத்திரி, ராமஸ்வாமி என்று இருக்கக்கூடாது. நான் என் பெயர் வியாஸர் என்று வைத்துக் கொள்கிறேன்.



"பிராணாயாமம் நடக்கிறாப் போலிருக்கு"

ரா:—ஏண்டா அந்த மனுஷனுடைய நல்ல பேரைக் கெடுக்கிறாய்?

சே:—கோபித்துக் கொள்ளாதே; உனக்கும் சுக்கிர பகவான் என்று பெயர் வைக்கிறேன்.

ரா:—அட சனி பகவானே! என் கண் ஒரு மாதிரியாக இருக்கிறதென்று தானே கேலி செய்கிறாய்?

[சேஷாத்திரி சட்டென்று நின்று வயிற்றைப் பிடித்துக் கொள்கிறான்.]

சே:—ஐயோ! எனக்கு வயிற்றைப் பசிக்கிறது! இந்தக் கல்லில் சற்று உட்காரலாம், வா!

ரா:—வீட்டில் சாப்பிட்டு விட்டு வந்தாயோ, இல்லையோ!

சே:—எங்கே வீட்டில் சாப்பிடுகிறது! எல்லாம் 'ரேஷன்' பண்ணி விட்டானே! வட துருவத்திலிருந்து அரிசி வந்தால்தான் ரேஷன் விதிகளைத் தளர்த்துவார்களாம்!

ரா:—எனக்குந்தான் வயிற்றை என்னமோ செய்கிறது. ஹோட்டலுக்கு... ஐயோ! பழைய ஞாபகம்!

சே (ஆற்ற மாட்டாமல் சிரிக்கிறான்):—ஹோட்டலா, யுத்தம் ஆரம்பித்ததுமேதான் அதுகளை யெல்லாம் மூடி விட்டார்களே! சில்லறை இல்லாமல் மூடின ஹோட்டல் வேறு; சாமான் கிடைக்காமல் மூடின ஹோட்டல்கள்தான் எவ்வளவு! இனிமேல் ஹோட்டலையே நாம் இந்த ஜன்மத்தில் பார்க்க முடியாதோடா?

ரா:—ஏன் இப்படி முழிக்கிறாய்? மயக்கம் வருகிறதா என்ன? கீழே விழு

வதற்கு முன் அந்தத் தோட்டத்திற்குப் போய்ச் சில கனி வர்க்கங்களைச் சாப்பிட்டுவிட்டுப் போகலாம். புறப்படு!

சே (ஹீனக் குரலில்):—அங்கே இருக்கிற பழங்களை யெல்லாம் கண்டிராக்டர் துருப்புக்களுக்கு அனுப்புகிறான். அங்கே போனால் காலை முறித்துவிடுவான் ...

ரா:—இதற்காகக் கவலைப்படாதே! முன் காலத்தில் ஒன்றும் அகப்படாவிட்டால் வாயு பட்சணம் செய்வார்கள். அது எப்படிச் செய்கிறதென்று நாம் கண்டு பிடிக்கலாம், வா!

சே:—வாயு பட்சணம் செய்ய அவர்கள் கண்டு பிடித்திருக்கலாம்; ஆனால், இந்தக் காலத்தில்தான் அடிக்கடி விஷ வாயு போடுகிறார்களே; ஆகையால் விஷ வாயு பட்சணம் செய்வதற்கு வழி சொல்லி யிருக்கிறார்களா, என்று கண்டு பிடிக்க வேண்டும். இந்தத் தொந்தர வெல்லாம் என்னத்திற்கு? முடிவாக ஒரு வழி யில்லாமல் போக வில்லை.

ரா:—சேஷாத்திரி! எதற்காக இப்படி உட்கார்ந்து கொள்கிறாய்? சுகப்பிரும்ம ரிஷி தபஸ் செய்கிறதுபோல் உட்கார்ந்து கொள்கிறாயே!.........ஏது? பிராணயாமம் நடக்கிறாப் போலிருக்கு! பலே, பேஷ்!

[இந்த இடத்தில் ராமசாமிக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் வரவே ஒரு துள்ளுத் துள்ளுகிறான்.]

அட பாவி! மூக்கைப் பிடித்துக் கொண்டு உயிரை விடப் பார்க்கிறாயே. ஆகாரம் கிடைக்கவில்லை யென்றால் யாராவது உயிரை விடுவார்களா! அட சேஷாத்திரி! சேஷாத்திரி!!

சே (எரிச்சலுடன்):—துக்கிரித்தனமாகத் தடுக்காதே! நான் மனு வியாசர் காலத்துக்குப் போவதைவிட மனு, வியாஸரோடு ஐக்கியமாவதற்காகத்தான் முயற்சி செய்கிறேன்! அவர்களைப் பற்றி இவ்வளவு தூரம் நீயே சொல்லிவிட்டு இப்பொழுது தடை செய்யலாமா! இது தருமா, இது முறையா?

[சேஷாத்திரி மறுபடியும் மூக்கை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவே, ராமஸ்வாமி அவனைக் கிச்சுக் கிச்சு மூட்டுகிறான். இருவரும் சிரிக்கிறார்கள். திரை விழுகிறது.]




தணிக்கையாள் சொல்லுகிறார் . . .

“அழுக்கடைந்த ஆடைகளிலிருந்து அழுக்கைத் தானாகவே போக்கி விடுவதால் சுயமாக வெளுக்கும் சக்தி வாய்ந்ததென்று இதை சோப் செய்யும் ரசாயன சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அதில் வெளுக்கும் ‘சக்தி’ அதிகமாக உள்ளதென்றும் சொல்லுகிறார்கள. ஸன்லைட் சோப்பின் நுரையை ஆடைகளுக்கு இட்டால் அது வெளுக்கும் வேலையை நமக்கு சிரமம் கொடுக்காமல் செய்து விடுகிறது. என்னுடைய சம்சாரமும், தாயாரும் எனக்கு இதை அநேக தடவை சொல்லி இருக்கிறார்கள்.”

# ஸன்லைட் சோப்

## சுயமாக வெளுக்கும் நுரை உடையது




இப்பொழுது மெழுகுத் தாளினால் சுற்றப்பட்டு விற்கப்படுகிறது

S. 63-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு


ஆ மந்திராக்காளி! இதோ உனக்கு ஒன்று வரவழைக்கிறேன் பார்!
இதோ ஆப்பிள் பழம்!
ஆ மந்திராக்காளி!
இதோ ஒரு முத்துமாலை!
ஆ மந்திராக்காளி!
இதோ வாசனைத் தயிலம்!
ஆ மந்திராக்காளி!
இதோ அசோகா பாக்குத்தூள்!
மகாஜனங்களே! முதல் மூன்று வித்தைகளை உங்களால் செய்யமுடியாது. ஆனால் அசோகா பாக்குத்தூள் வரவழைக்கும் வித்தையை எந்த நிமிஷமும் உங்களால் செய்யமுடியும். என்றும் மகாஜனங்களே! அசோகா பாக்குத்தூள் எங்கும் கிடைக்கும்!

Regd. No. M. 4392



Edited, Printed and Published by R. Krishnamurthy, at the "Kalki" Press, *116-119*, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.